விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை06 திங்கட்கிழமை (20.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 32

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் — thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better Place
for your children

# பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவம் வெளியேறக் கூடாது!

## முன்னாள் இந்திய இராணுவத் தளபதி சதீஸ் நம்பியார் ஆலோசனை

(நமது நிருபர்)

**வடக்குக் கிழக்கிலுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் வெளியேறக் கூடாதென முன்னாள் இந்திய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார் அரசாங்கத்திற்கு கையளிக்கவுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக அங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேறக் கோருமாறு புலிகள் விடுத்த கோரிக்கையை அடுத்தே சதீஸ் நம்பியாரிடம் இருந்து பாதுகாப்பு தொடர்பான அறிக்கையைப் பெறுவதற்கு அரசு அவரை நாட வேண்டியிருந்தது.

அரசாங்கம் சதீஸ் நம்பியாரிடம் இருந்து அறிக்கையைக் கோருவதற்கு முன்னதாகக் கடந்த வருடம் செப்ரம்பர் மாதம் அளவில் சதீஸ் நம்பியார் யாழ்ப்பாணம் வந்திருந்த போது அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு விஜயம் செய்ததுடன் யாழ்.குடாநாட்டு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவையும்

(10ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயம் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கம்

### அமைச்சர் மிலிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கின் உயர்பாதுகாப்பு வலயம் குறித்து,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு,தமது அரசாங்கம் விளக்கி இருப்பதாக,பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ,இந்தியாவின் முன்னாள் படைத் தளபதி சதீஸ் நம்பியாரின் அறிக்கை கிடைத்ததும் அது குறித்து ஜனாதிபதியை அவரது இல்லத்தில் உத்தியோக பூர்வமாகச்சந்தித்து பேச்சு நடத்த விருப்பதாக,அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

(10ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச இந்து மாநாட்டை ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்

### அமைச்சர் மகேஸ்வரனிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் மே மாதம் நடைபெறவுள்ள சர்வதேச இந்து மாநாட்டில் கலந்து கொண்டு, மாநாட்டை ஆரம்பித்து வைக்குமாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மாளிகைக்கு அமைச்சர் தி.மகேஸ்வரன் சென்ற போதே அந்த வேண்டுகோளை அவர்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகாவுடன் ஜே.வி.பியினர் இன்று சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை இன்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்படவுள்ள எதிர்கால அரசியல் கூட்டுக்குறித்து, பொதுவான யாப்பு ஒன்றினை அமைப்பது குறித்து, இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாள் மைத்திரிபால ஸ்ரீசேன, பாராளுமன்ற உறுப்பினர்களான

(10ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி தலைவர் மகிந்த இன்று யாழ் - வருகிறார்

### பௌசியும் உடன் வருவார்

(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜாபக்ஷவின் தலைமையிலான எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முதற்தடவையாக இன்று யாழ்.நகர் வரவுள்ளனர்.

இவர்களின் யாழ்.வருகைக்கான ஏற்பாடுகளை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகைதரவுள்ள எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடன் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான பாரதலஷ்மன் பிரேமச்சந்திரா, ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே மற்றும் பௌஸி ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள பாதுகாப்புவலய மீள்குடியேற்றம் தொடர்பானஉண்மை நிலைகளை நேரில்கண்டறியும் பொருட்டு யாழ்ப்பாணம் வருகைதரவ்ுள்ள எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான குழுவினர் நெடுந்தீவுக்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளையும் ஆராயவுள்ளனர். இதே வேளை யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட குருகுலத்தையும் மகிந்த ராஜபக்ஷ திறந்து வைப்பார்.

எதிர்க் கட்சி தலைவருடன்

(10ம் பக்கம் பார்க்க)

## விபத்தில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்திரைச் சந்தியில் நேற்றுக் காலை இடம் பெற்ற வான்-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தாா.

மீசாலை ஐயா கடையடியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் தேவபாலன் (வயது-42)என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கபட்டுள்ளது. (த)

## குருகுல கலாசாலை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இந்து கலாசார அமைச்சினால் அமைக்கப்பட்ட வேதாகம குருகுலக் கலாசாலை இன்று காலை 10மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படும குருகுல கலாசாலையில் நேற்று இரவு முதல் விஷேட பூஜைகள் இடம் பெற்றன. (ந)

## வடக்கு கிழக்கு புனரமைப்புக்கு 4 கோடி 30 லட்சம் டொலர் வழங்கப்படும்

### உலக வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனரமைப்புப் பணிகளுக்கான நிதியினை அடுத்த மாதத்தில் இருந்து வழங்கப் போவதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.

பொதுசுகாதாரம், மீள்குடியேற்றம், கல்வி மற்றும் அடிப்படை வசதிகளை விருத்தி செய்வதற்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்ட 4 கோடி 30 லட்சம் அமெரிக்கடொலர் நிதியினைஅவசர

(10ம்பக்கம் பார்க்க)

## புலிகள் பற்றிய புரிந்துணர்வு நோர்வேக்கு இல்லை

### முன்னாள் இந்தியத் தூதுவர் டிக்சிற பேட்டி


(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தமக்கு ஒரு குகையைஅமைத்துக் கொள்வதற்கு சமாதானப் பேச்சுக்களை பயன் படுத்துகின்றனர்.பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரலாற்றுத்திருப்பு முனையாக சமாதானப் பேச்சுக்களை புலிகளுடன் ஆரம்பித்திருக்கிறார். அவரது அரசாங்கமும் நோர்வேயும் புது நல்லிணக்கம் கொண்டிருக்கின்றனர். ஆனால் புலிகளின் நீண்ட குறியிலக்குகள் பற்றி எனக்கு பிரத்தியேகமான தனி அபிப்பிராயங்கள் உள்ளன.

இவ்வாறு இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்சிற் டுபாயில் வெளிவரும் கல்வி நியூஸ் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில் புலிகள் ஏற்கனவே நாட்டைப்பிரித்து விட்டனர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலையை தம்வசம் வைத்திருக் (10ம் பக்கம் பார்க்க)

ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி
வாரத்தில் ஆறு நாட்கள் சனிக்கிழமை உட்பட



ஒரு பவுணுக்கு ரூ. 6325/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி1.8% மட்டுமே!
மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்
ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி: 021-2222787,021-2223463
தொலை நகல்: 021-2223194
[C/5501]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# திருநகரில் சுகாதார சீர்கேடு

# அபிவிருத்தி நடவடிக்கைக்கு உத்தரவு

## உயர் மட்டக் குழு நேரில் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநகர்ப் பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற போதும் 19 மலசல கூடங்கள் மட்டுமே உள்ளன. 10 பொது மலசல கூடங்கள் இருந்தும் கூட அவையும் சீரான பராமரிப்பின்றி பாவிக்க முடியாத நிலையில் உள்ளன. சீரான முறையில் இவற்றைப் பயன்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென யாழ். மாநகராட்சி மன்ற தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

யாழ். மாநகரசபை நீர் வேலைப்பகுதி, சுகாதாரப் பகுதி, வேலைப்பகுதி பொறியியலாளர் சகிதம் திருநகர்ப் பகுதிக்கு நேரில் விஜயம் செய்து அம்மக்களின் அவல நிலையை நேரில் அறிந்த பின்னரேயே மேற்கண்ட உத்தரவை அவர் விடுத்தார்.

இப் பகுதியில் உள்ள மலசல கூடங்களுக்கு கதவுகள் பொருத்தப்படுவதுடன், அவற்றை பயன்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதுடன், இப்பகுதியில் சேரும் குப்பை, கூழங்களை பாதுகாப்பான முறையில் அகற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்ட உயர் மட்டக் குழுவினர் திருநகர்ப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள சுகாதார சீர்கேடுகள் குறித்து நேரில் அவதானித்துச் சென்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறு விளம்பரம்

### தேவை

தொலைத் தொடர்பு நிலையமொன்றிற்கு உதவிக்கு பெண் பிள்ளை தேவை. தொடர்பு - சுமன் தொலைத் தொடர்பு நிலையம் இல-670 மானிப்பாய் வீதி, ஆலடிச் சந்தி ஒட்டுமடம். (6468)

### TYPIST தேவை

WINTO தொலைத் தொடர்பு நிலையத்திற்கு கணனியில் Typing செய்வதற்கு திறமையுடையவர்கள் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 06, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (அண்ணா கோப்பிக்கு மேல்). (6473)

### தவறிவிட்டது

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா சிவதாசன் அவர்களின் தேசிய அடையாள அட்டை சுன்னாகம் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டவர்கள் வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும், அடையாள அட்டை இல 348100629 V (கி- 5647)

## குட்டியப்புலத்தில் கேணல் கிட்டுவின் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் நினைவு நிகழ்வுகள் குட்டியப்புலம் ஆரம்ப பாடசாலையில் கொண்டாடப்பட்டது.

அதிபர் செ. கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற மேற்படி வைபவத்தில் ஈகச்சுடர் ஏற்றல், மலர் அஞ்சலி போன்ற நிகழ்வுகளை தொடர்ந்து ஆசிரியர் முகுந்தன், செல்வன் செந்தூரன் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

பெற்றோர் ஆசிரியர்கள் சங்கப்பிரதிநிதிகள் உட்படபலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

உலக இந்து மாநாட்டை ஒட்டி,

## வட- கிழக்கு மாகாணத்தில் விழிப்புணர்ச்சி மாநாடுகள்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் இந்து மாநாடுகள் நடைபெறவுள்ளன.

எதிர் வரும் மே மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள 2 வது உலக இந்து மாநாடு குறித்து வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்து மாமன்ற செயலாளர் நாயகம் எஸ்.பத்மநாதன் கருத்து வெளியிடுகையில்;

2 ஆவது உலக இந்து மாநாடு முற்றிலும் மாறுபட்ட ரீதியில் மாறுபட்ட சூழலில் அனைவரினதும் ஆதரவுடன் நடத்தப்படவுள்ளது.

இந் நிகழ்விற்கு தமிழகத்தில் இருந்து பேரறிஞர்கள் வரவுள்ளனர். இம் மாநாட்டை முன்னிட்டு யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்து கலாசார ஊர்திகளை கொண்ட பவனிகள் கொழும்பிற்குவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றார். (உ-10)

## காணாமல்போனோர் தொடர்பான விசாரணை யாழ்.பொலிஸ்நிலையத்தில்

### உறவினரையும் கலந்துகொள்ள அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் யாழ் பொலிஸ் நிலையத்தில் வைத்து மேற்கொள்ளப்படவுள்ளது.

கீழ்வரும் பெயர் உடையோரின் உறவினர்கள் அல்லது பாதுகாவலர்கள் இவ் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

- எ.எ. அருணகிரிநாதன், சாவகச்சேரி.
- அ. லக்ஷ்மன் 1ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.
- அ. மரியசீலன் புன்னாலைக் கட்டுவான், தெற்கு, யாழ்ப்பாணம்.
- அ. குயின்டன் ராஜ்குமார் குருநகர் யாழ்ப்பாணம்.
- அ. ஜோசப் நாவற்குழி, புதூர்.
- அ. ஜூட் பாக்கியநாதன் 3 ம் குறுக்குத் தெரு, பாசையூர்.
- அ. கேதாரகௌரி கைதடி, யாழ்ப்பாணம்.
- அ. செல்வக்குமார் இல 34 புதுநடியிருப்பு, அராலி
- ஆ. ரவி இல 10, சின்னலன்குட்டி, அரியாலை.
- அ. புஷ்பதாஸ் ஒட்டுவாலி மிருசுவில்.
- அ. பாலசுப்பிரமணியம் நவாலி, வடக்கு, மானிப்பாய்.
- பா. ஜயமோகன் இல. 183 ஜின்னா வீதி, மானிப்பாய்.
- பா. பரராஜசிங்கம் கீரிமலை வீதி சின்னக்கேணி, யாழ்ப்பாணம்.
- பா. துஷ்யந்தன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.
- ப. சந்திரசேகரம் இல 143/1 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
- சி. பாலசிங்கம் கைதடி நுணாவில், யாழ்ப்பாணம்.
- க. முடியப்பு இல, 23, 3 ஆம் குறுக்குத்தெரு, குருநகர்.
- செல்லத்துரை பாடசாலை ஒழுங்கை, வேம்படி, யாழ்ப்பாணம்
- செ. ஜெகதீஸ்வரன் இல, 22, அல்லாரை தெற்கு, மீசாலை.
- செ. கந்தசாமி கோண்டாவில், யாழ்ப்பாணம். (அ)

## நகர ஆசிரியர்களுக்கு விரைவில் இடமாற்றம்

(கொழும்பு)

நகரப் பகுதிகளில் நீண்ட காலமாக கடமையாற்றிவரும் அதிபர்களும் ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளதுடன் புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்களையும் கஷ்டப் பிரதேசங்களுக்கே நியமிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கருத்து வெளியிடுகையில்;

நாட்டில் உள்ள 10 ஆயிரம் பாடசாலைகளில் கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆயிரம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் 7 ஆயிரம் பாடசாலைகளில் சராசரி 200 மாணவர்களே கல்வி கற்றுவருகின்றனர்.

இதற்கு முக்கிய காரணம் நகரப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு மாணவர்களும் பெற்றோர்களும் விருப்பம் கொண்டுள்ளமையாகும்.

அத்துடன் பின்தங்கிய அதாவது கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்க ஆசிரியர்களும் அதிபர்களும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

எனவே இவற்றிற்கு தீர்வு காணும் வகையிலே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை 5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் கஷ்டப் பிரதேசத்தில் உள்ள 50 பாடசாலைகள் ஒவ்வொரு வருடமும் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (க-10)

## வீதியில் கடற்படையினர் உடற்பயிற்சி

(ஊர்காவற்றுறை)

வேலணை கிழக்கு பிரதான வீதியில் காலை வேளையில் கடற்படையினர் உடற்பயிற்சியில் ஈடுபடுகின்றார்கள்.

இதனால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக இருப்பதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

வேலணை துறையூர் கடற்படைமுகாமைச் சேர்ந்த கடற்படையினரே இப்பயிற்சியில் ஈடுபடுகின்றனர். (க-75)

சமாதான யான பிரயத்தனம் மேற்கொண்டு பாடுபடுகின்றார் என்றும் பவல் பிரதமருக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

இதேவேளை, கொலின் பவலை இலங்கைக்கு வருமாறு பிரதமர் அழைத்து எழுதிய கடிதத்தை தூதுவர் அவரிடம் நேரடியாக வழங்கினார். (அ)

## ஒருஇலட்சம்இலங்கையருக்கு வெளிநாட்டுவேலைவாய்ப்பு

(கொழும்பு)

இவ்வருடம் 1லட்சம் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் சுஸந்த பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், தற்போது சுமார் 10 லட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளில் வேலை செய்து வருகின்றனர்.

இவர்கள் சென்றவருடத்தில் மட்டும் 115 கோடி ரூபாவை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

இந்த ஆண்டு இவர்களால் அனுப்பப்படும் தொகை மேலும் அதிகரிக்கும்வாய்ப்புஉள்ளது எனக் குறிப்பிட்ட சுஸந்த பெர்ணாண்டோ வெளிநாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்களுக்கு தகுந்த பாதுகாப்பளிப்பது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்களிற்கு மேலதிக வசதிகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (க-10)

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி.

### பரிசில்கள்

1 ஆம் பரிசு ரூபா 500
2 ஆம் பரிசு ரூபா 250
3 ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ அமரர் ச. அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்கள் ஞாபகார்த்தமாக இப் பரிசில்கள் வழங்கப்படும்.

### போட்டியின் விதிகள்:

- ★ ஆறாந்தரத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப் போட்டியில் பங்கு பற்றலாம்.
- ★ கட்டுரையின் தலைப்பு ''எமது கிராமம்''
- ★ கட்டுரை 100 தொடக்கம் 125 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
- ★ புஸ்காப்தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
- ★ கட்டுரைகள் 25 - 01 - 2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின் வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

**கட்டுரைப் போட்டி இல-1**

மாணவர் முழுப் பெயர் ____________________

பாடசாலை ____________________

கற்கும் தரம் ____________

உறுதிப்படுத்துகிறேன் ____________________

வகுப்பாசிரியர்

# ...ய சுதந்திர உரிமைகள் ...ளவாக எழுந்ததே போர்

...ிகையில் "எவரும் தமிழர்களுக்கான "சி.டி.சின்னக்கோன்" என்பவரால் ...த்திற்கு பயங்கரவாதச் சேறுபூச ...முனைந்த சக்திகளுக்கு சவுக்கடி

... குழப்பங்கள் ஏற்பட... விட்டன. சிங்களப் பெரும்பான்மை ஒரு திட்டமிட்ட, தீர்மானமான இராணுவ் செயல்திட்டத்துடன் பௌத்த சிங்கள ஆதிக்கக் கொள்கையை நிலைநிறுத்துவதற்கான தங்களது திட்டத்தை பின்பற்றியது. சுதந்திரத்திற்கு பிந்திய சிலோனின் (தற்போதைய இலங்கை) முதலாவது பிரதம மந்திரியும் அவரது நண்பர்களும் தமிழ்பிரதேசங்களில் அரச உதவியுடனும் அரச பாதுகாப்புடனும் சிங்கள குடியேற்றங்களை அமைப்பது தொடர்பான திட்டமிடப்பட்ட கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தினார்கள். தமிழ் அரசியல் வாதிகளும் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமலும் தொலைநோக்கற்றவர்களாகவும் இருந்தார்கள்.

### சிங்களக்குடியேற்றம்

வெற்றிபெற்ற சிங்கள சார்புடைய அரசாங்கங்கள் தமிழ்க்கிராமங்களுக்குள் அத்துமீறி குடியேற்றங்களை ஏற்படுத்தியதுடன் தமிழ்ப்பிரதேசங்களில் சிங்களவர்களுக்குச் சார்பான குடித்தொகைப் பரம்பலை ஏற்படுத்துவற்காக பெருமளவு சிங்கள மக்களை அங்கே குடியிருத்தினர். அத்துடன் சிங்கள பாடசாலைகள் தொடங்கப்பட்டன தமிழ்ப்பாடசாலைகள் மூடப்பட்டன. பாவனையிலிருந்த வீதிகள் மூடப்பட்டன. சிங்கள மக்கள் குடியேறிய இடங்களுக்கூடாக புதிய வீதிகள் அமைக்கப்பட்டன. அவ்வீதியால் செல்லும் தமிழ் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் அவர்கள் படிப்படியாக அவ்விடங்களிலிருந்து விலகுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். 1956ம் ஆண்டு அதிகாரப்பசி கொண்ட சிங்களத் தலைவரும் தற்போதைய ஜனாதிபதி சந்திரிக்காவின் தந்தையுமாகிய S.W.R.D பண்டார நாயக்க "இருபத்திநான்கு மணித்தியாலத்துக்குள் தனிச் சிங்களச் சட்டம்" என்ற கொள்கையின் மூலம் பொதுமக்களின் எண்ண அலையை தூண்டி ஆட்சிக்கு வந்தார். இச்சம்பவம் இந்நாட்டின் ஐக்கியத்துக்கும் சமாதானத்திற்குமான முடிவின் ஆரம்பமாக இருந்தது. பின்பு விரைவில் இப்புதிய பிரதமமந்திரி அரச அலுவலகங்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக அனைத்து அறிவுறுத்தல்களும் தனிச்சிங்களத்தில் இருக்க வேண்டுமென்ற புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தினார்.

### தமிழர்கள்தாக்கப்படல்

. தமிழ்மக்கள் தங்களுடைய எதிர்ப்புக்களை சாத்வீகமான முறையில் வெளிப்படுத்தினார்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ் அங்கத்தவர்கள் தரையில் அமர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அரசாங்கம் சிங்கள கும்பல்களை ஏவி அவர்களை தாக்கியது. பொலிஸாரும் இதனைப்பார்த்தவாறு இருந்தனர். இவற்றிற்கு உத்த... மீது தாக்குதலை தொடங்கியது. தமிழர்களுடைய வீடுகளும் சொத்துக்களும் கொள்ளையடிக்கப்பட்டன. உடமைகள் அழிக்கப்பட்டன. அந்நாளில் அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது பொதுமக்கள் கலவரமாக இது இருந்தது. இதனைத் தொடர்ந்து 1956, 1958, 1967, 1970, 1977 அகிய ஆண்டுகளிலும் கடைசியாக 1983ஆம் ஆண்டும் ஒவ்வொரு அரசாங்கத்தாலும் ஒரே மாதிரியான தன்மைகளுடன் கலவரங்கள் துண்டிவிடப்பட்டன. 1983ல் இடம்பெற்ற இனக்கலவரம் திட்டமிட்ட இனப்படுகொலையாக விருந்தது. நாடுபூராகவும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டன. வியாபார நிறுவனங்கள் கொள்ளையடிக்கப்பட்டடு எரியூட்டப்பட்டன. தமிழ் மக்கள் இந்தியாவிற்கும் தமது தாயகப்பிரதேசமான வடக்குக்கிழக்கிற்கும் தப்பியோடினார்கள்.

அரசாங்கத்தினுடைய பெரும் பயங்கரமான, குரூரமான, அமைதியற்ற அதிகார துஸ்பிரயோகமானது, பாதுகாப்புபடையினரை கொள்ளைக்காரர்களுக்கும் காடையர்களுக்கும் உதவிபுரிய வைப்பதாகவிருந்தது. அப்போதைய இந்தியப் பிரதம மந்திரியான இந்திராகாந்தி இப்பிரச்சினையில் இந்திய தலையிடப்போவதாக எச்சரிக்கை விடுவிக்கும் வரை நான்கு நாட்களாக இக்கலவரத்தை அடக்குவதற்கு எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

### இளைஞர்கள் கொந்தளிப்பு

இளம் தமிழ்த்தலைமுறையினர் தமிழினத்தை பூண்டோடு அழிக்கத் திட்டமிடப்பட்ட இவ்வாறான நடவடிக்கைகளை சகித்துக் கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். எந்த நாகரீகமற்ற மனிதனாலும் இதனை ஒரு இனப்படுகொலையாகவன்றிவேறெந்த வகையாகவும் ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்தது.

மக்கள் பலர் உயிருடன் கொழுத்தப்பட்டனர். பாலகர்கள் அவர்களின் தாய்மாரிடமிருந்து பறிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். பெண்கள் அவர்களுடைய பெற்றோர்கள் முன்னிலையில் மானபங்கப்படுத்தப்பட்டனர். இவை யாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல அப்போதைய பிரதமமந்திரி அரச தொலைக்காட்சியில் கலவரத்தை நியாயப்படுத்தியும் உலக நாடுகளுக்கு மனித உரிமைகள் பற்றியும் உரையாற்றியமை இருந்தது.

தமிழ் இளஞ்சந்ததியினர் தமது பல்கலைப்படிப்பை தொடருவது இடைநிறுத்தப்பட்டது; வேலை வாயப்புக்களிலிருந்து விலக்கப்பட்டனர், வெளிநாடுகளுக்கு செல்லத்தடுக்கப்பட்டனர், அத்துடன இவ்வாறான வழிகளில் அவர்களின் உணர்வுகள் கொதியூட்டப்பட்டன. அவர்கள் அரசாங்கதிற்கெதிரான போராட்டங்களை ஆரம்பித்தனர். ஆனால் அரசாங்கம் தனது இராணுவத்தையும் பொலிஸாரையும் கட்டவிழ்த்து விட்டது. அவர்கள் கைது செய்தல், சித்திரவதை செய்தல், கொலை செய்தல், முடமாக்குதல் போன்ற பயங்கரவாத ஆட்சியை தொடங்கினார்கள். அனைத்துச் செயற்பாடுக்களும் வன்முறைச்சக்கரமாக வடிவெடுத்தன. அரச பயங்கரவாத்திற்கு தமிழர்களையும், தமிழ்ப் பிரதேசங்களையும் அழிப்பதற்கு அனைத்து வகையான ஆயுத உபகரணங்களும் கடுமையான போர்த்தளபாடங்களும் கொடுக்கப்பட்டன.

### இந்தியத் தலையீடு

இந்தருணத்தில் இந்தியா தலையிட்டு இந்திய அமைதிகாக்கும் இராணுவத்தை தமிழர்களுக்கு உதவுவதற்காகவும் தமிழ்ப் பிரதேசங்களை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காகவும் அனுப்பியது. இறுதியில் இந்திய இராணுவமும் கூடாத பெயரை பெற்றுக்கொண்டதோடு நாட்டைவிட்டு அனுப்பப்பட்டது. சமாதானத்தை உருவாக்குதல் என்ற வரலாறும், இந்த நாட்டில் பிறப்பால் தமிழர்களும் சம உரிமையுடைய குடிமக்கள் என்ற நிலைப்பாடும் இலங்கை அரசாங்கத்தால் தொடர்ந்தும் ஏமாற்றத்தை கொடுக்கும் வெற்றிகரமான காலப் பகுதிகளாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

உடன்படிக்கைகளும் தீர்வுத் திட்ஙகளும் தமிழர்களுடைய சுமையை தீர்ப்பதாகக் காலத்தைக் கழிக்க மட்டுமே செய்து கொள்ளப்பட்டன. இவ்வாறான செயன்முறைகளில் தமிழ்மக்களின் உரிமைகளைக் குறைப்பதற்காய் சிங்களவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு கூடிய முக்கியத்துவமளித்தும் அவர்களை முதன்மைப்படுத்தியும் பயன்படுத்தினார்கள்.

### மாற்றுவழியில்லை

தமிழ் இளைஞர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டபோது.. அவர்களுக்கு போராடுவதைத்தவிர வேறு மாற்றுவழிகள் இருக்கவில்லை. பழிக்குப்பழி வாங்கும் நோக்குடன் போராடத் தொடங்கினார்கள். அவர்கள் அரச அடக்குமுறைகளிலிருந்து விடுதலை பெறுவதற்காக போராட வேண்டியிருந்தது. அவர்கள் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டார்கள். அத்துடன் அவர்களுடைய சுதந்திர உணர்வை இல்லாமல் செய்வதற்காக மிகக்கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. தமிழ் இளைஞர்களை அழித்தொழிப்பதற்கு அரச இயந்திரமும், இராணுவ முப்படையினரும், பொலிசாரும் எதேச்சையான அதிகாரங்களை முழுவீச்சில், எவ்விதகட்டுப்பாடுகளின்றியும் தொடுத்தனர். இலங்கைப்படையினருக்கு ஆயுதப்பயிற்சியளிப்பதற்கு வெளிநாட்டு இராணுவத்தினர் தருவிக்கப்பட்டனர். அதேபோல ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம, இஸ்ரேல், தென்கொரியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து ஆயுத தளாபடங்களும் வாங்கப்பட்டன.

ஒருங்கிணைக்கப்பட்ட படைகளும் அவர்களுடைய பலமும் தமிழ் ஆயுதக்குழுக்களை தோற்கடிக்க இயலாமல் இருந்தது. தமிழ் ஆயுதக்குழுக்கள் கொடுங்கோல் ஆட்சியாளர்களால் வெறுமனே ஆட்பலத்தையும் ஆயுதப்பலத்தையும் கொண்டு சுதந்திர உணர்வை அடக்க முடியாது என்பதை உலகிற்கு கற்பித்துக் காட்டினார்கள வரலாறும் அவ்வாறான பல நிகழ்வுகளை கொண்டிருக்கின்றது.

### பயங்கரவாதிகளல்ல.

அமைதி நடவடிக்கைகளுக்கான தற்போதைய நிலைமையானது தங்களுடைய தலைவிதியை தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் தமிழர்களுடைய சுதந்திர உணர்வை இலங்கை அரசால் அடக்க முடியாமல் போனதன் வெளிப்பாடேயாகும்.

எல்.ரி.ரி.யினர் முழு உலகிற்கும் தாங்கள் பயங்கர வாதிகள் இல்லையென நிரூபித்து காட்டியிருக்கிறார்கள். அவாகள் அரச பயங்கரவாதத்தாலேயே ஆயுதத்தை தூக்க நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். அவர்கள் இலங்கைப் படையினரின் மனங்களில் தாங்கள் பயங்கரவாதத்தால் தோற்றம் பெற்றவர்களேயொழிய பயங்கர வாதத்தை

**தமிழில்**
**உடுவில் ம. மயூரன்**

தோற்றுவிப்பதற்காய் உருவாகவில்லை என்பதை உணர்த்தியிருக்கிறார்கள்.

இங்குள்ள மிகச்சரியான உண்மை என்னவெனில் ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான முண்ணணியில் நாற்பது நாடுகள் பங்குகொண்டமை தமிழ்மக்கள் நேர்மையான முறையில் தீர்க்க வேண்டிய துன்பதுயரங்களை கொண்டுள்ளார்கள். அத்துடன் இந்தநாட்டில் பிறப்பிலிருந்து சமத்துவத்துடனும் கௌரவத்துடனும், சுதந்திர உணர்வுடனும் வாழ்வதற்கான அவாவினை உடையவர்க ளாக இருக்கின்றார்கள் என்பதற்கும் பெருஞ் சான்றாக இருக்கின்றது. "யாராலும் அவர்களுடைய சுதந் திரத்திற்கான உரிமைகளை மறுக்கமுடியாது".

## புனர்வாழ்வு நடவடிக்கை அடுத்தமாதம் ஆரம்பம்

(கிளிநொச்சி)

புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உபகுழு அடுத்தமாதம் தொடக்கம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் இணைப்பாளர்களை எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்ட இணைப்பாளர்களை தமிழீழ விடுதலைப் புலிகளே சிபார்சு செய்வதுடன், அவர்களது தரப்பில் மாவட்ட ஆலோசனைக் குழுவுக்கு பெண் போராளி உட்பட மூவர்களின் பெயர்களை சிபார்சு செய்யவுள்ளனர்.

அரசாங்கத்தின் தரப்பில் மாவட்ட அரச அதிபர் உட்பட மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் மாவட்ட இணைப்பாளர்களும் ஆலோசனைக் குழுவும் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெப்ரவரி 13ம், 14ம் திகதிகளில் அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ந-5)

## வடமராட்சியில் சமுர்த்திவங்கி

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்திற்கான முதலாவது சமுர்த்தி வங்கி நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் திறந்து வைக்கப்பட்டது.

ஏனைய பகுதிகளுக்கான சமுர்த்தி வங்கிகள் கட்டம் கட்டமாக திறந்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-43)

## இளைஞன் மரணம்

(உடுவில்)

இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் திடீரென மரணமாகியுள்ளார்.

ஆக்லேன் உடுவிலைச் சேர்ந்த வர்த்தகர் மகாதேவன் நிமலதாஸ் (வயது 28) என்பவரே இவ்வாறு திடீரென மரணமானவராவர். (இ.5-261)

## கம்பனிகள் பதிவு செய்தல் வெகுவாக அதிகரிப்பு

### கம்பனி பதிவாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்தில் பதிவுசெய்யபட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கை அதற்கு முன்னைய ஆண்டினைவிட 45 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக கம்பனிப் பதிவாளர் ரீ.கே. கெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்; மூவாயிரத்து 284 கம்பனிகள் கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் சரித்திரத்தில் அதிக கம்பனிகளின் பதிவு கடந்த ஆண்டே பதிவு இடம்பெற்றுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட 3284 கம்பனிகளில் 3050 கம்பனிகள் தனியார் துறைக்கு சொந்தமனவை எனக் குறிப்பிட்ட கெட்டியாராச்சி,

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையினை அடுத்து கம்பனிகளின் எண்ணிக்கையும் அதன் பதிவுகளும் மேலும் அதிகரிக்கலாம் என்றார்.

இதுவரை இலங்கையில் 43 ஆயிரம் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-10)



யாழ்.மாவட்டத்தில் காணாமல் போனோரின் பெற்றோர், குடும்ப அங்கத்தினருடன் நேற்று யாழ் வேம்படி உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட படங்கள்

## சகல தரப்பினரும் ஐக்கியமாக வாழ்வதையே விரும்புகிறார்கள்

### யாழ். மக்கள் நிலைபற்றி ஓர் கருத்துக்கணிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண மக்கள் தொழில் வாய்ப்புகள் பற்றி பெருநம்பிக்கை கொண்டுள்ளனர். இலங்கையின் சகல இனமக்களும் ஐக்கியமாக வாழ முடியும் என்றும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இவ்வாறு, டிசம்பர் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை 320 பேர்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு தெரிவிப்பதாக "சோசியல் இன்டிக்கேற்றர்" நிறுவனம் தெரிவித்துள்ளது.

போரை முடித்து வைப்பதற்கு சமாதான பேச்சுக்கள் பெரிதும் உதவும் என்று 82%மான மக்கள் நம்புகின்றனர். போர் என்பது "உரிமைகளுக்கான போரட்டம்" என்ற அபிப்பிராயம் குறைந்துவருகின்றது என்றும் கருத்துக்கணிப்புகள் தெரிவிப்பதாகவும், 73%மான மக்கள் பேச்சுக்களின் முன்னேற்றம் பற்றி திருப்தி தெரிவித்திருப்பதாகவும், விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது 200 வருட சிறைத் தண்டனை விதித்தமை சமாதான நடவடிக்கைகளை பாதிக்கக் கூடியது என்று 70%மான தெரிவித்ததாகவும் அக்கருத்துக் கணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# வடகொரியாவில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி

## ஐ.நா. தூதுவர் கவலை

(நியூயோர்க்)

வடகொரியாவில் மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள தற்போதுள்ள முறுகல் நிலையை அடுத்து வடகொரியாவுக்கான உதவிகள் வழங்கும் நாடுகள் உணவு உதவிகளை நிறுத்திக் கொண்டதையடுத்தே இந்த நெருக்கடி தோன்றியுள்ளது என ஐக்கிய நாடுகளின் விஷேட தூதுவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிக்கல் இவ்வாறிருக்க அமெரிக்காவுக்கும வடகொரியாவுக்குமிடையிலான அணு ஆயுதப்பிரச்சினைகள் தொடர்ந்தும வலுப்பெற்றுக் கொண்டிருக்கின்றன.


இதனால் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு வடகொரியாவையும், அமெரிக்காவையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு செல்லும் முயற்சியில் ரஷ்யா தீவிரமாக ஈடுட்டுள்ளது.

### சிக்கலைப் பேச்சு மூலம் தீர்க்கலாம்

வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அணு ஆயுத முரண்பாடுகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவுக்குக் கொண்டு வர முடியுமென சீனாவுக்கான வடகொரியத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, வடகொரியாவின் இறைமையை ஏற்றுக்கொள்வதுடன் அந்த நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதையும் அமெரிக்கா தவிர்த்துக் கொள்ள வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சர்வதேச சமூகத்தின் கருத்துக்களைத் தவறான வழியில் அமெரிக்கா எடுத்துச் செல்வதாகவும், இதனை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வடகொரியத் தூதுவர் மேலும் கூறியுள்ளார். (பி-2)



அமெரிக்காவின் கொலம்பஸ் விண்கலம், புளோரிடா மாகாணத்தில உள்ள கேப கேனவரால் விண் வெளி நிலையத்தில இருந்து விண்ணில் செலுத்தப்பட்ட காட்சி. இதில் அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட 7பேர் பயணம் செய்கிறார்கள்.

## உலக தரிசனம்

### ஐ.நாவின் உதவியைக் கோருகிறார்

(கராகஸ்)

எண்ணெய் ஏற்றுமதிக்குப் பெரும பாதிப்பைத் தோற்றுவித்துள்ள எதிர்க்கட்சியினரின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் தோன்றியுள்ள அரசியல் பொருளாதார சிக்கல்களை முடிவுக்குக் கொண்டுவர உதவுமாறு ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் கோபி அனானை வெனிசுவேலா ஜனாதிபதி கியூகோ ஷாவிஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

கியூகோஷாவிஸ் பதவி விலக வேண்டுமென்றும், குறித்த காலத்திற்கு முன்னர் தேர்தல் நடத்தப் படவேண்டும் என்றும், கோரி எதிர்க்கட்சியினர் மேற்கொண்டுவரும வேலை நிறுத்தம் வெனிசுவேலாவில் தொடர்ந்துகொண்டிருப்பது தெரிந்ததே. (பி-2)

### சவூதி அரேபியா மறுப்பு

(ரியாத்)

ஈராக்கின் இராணுவத்தளபதிகளுக்குப்பொது மன்னிப்பு வழங்குமாறு தான் ஆலோசனையொன்றை முன்வைத்ததாகக் கூறப்படும் விடயத்தை சவூதி அரேபியப் புலனாய்வுப் பிரிவு நிராகரித்துள்ளது.

இந்த விடயம் முற்றிலும் ஆதாரமற்றது என்று சவூதிஅரேபியப் புலனாய்வுத் தலைவர் இளவரசர் நாகாப் அப்துல்அஸீஸ் கூறுகின்றார்.

இதேவேளை, ஈராக்கின் உள் விவகாரங்களில் தலையிடும நோக்கம் சவூதி அரேபியாவுக்கு இல்லையென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (பி-2)

### தியாகராஜர் இசைவிழா

(சென்னை)

திருவையாறில் தியாக பிரம்ம ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 156ஆவது இசைவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து ஆறுநாட்கள் நடைபெறவிருக்கும் இவ்விழாவினைப் பிரபல கிளரினட் வித்துவான் ஈ.கே.சி நடராஜன் ஆரம்பித்துவைத்தார். விழாவின் இறுதிநாளன்று பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகின்ற இசைக்கலைஞர்கள் தியாகையரின் பஞ்சரத்தின கீர்த்தனைகளை இசைப்பார்கள். (பி)

### காட்டுத்தீ பரவுகிறது

(கான்பெரா)

அவுஸ்ரேலியாவின் தலைநகர் கான்பெராவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ மேலும் பரவிவருகின்றது. இத் தீ கடுமையான காற்றினால் வேகமாகப் பரவி வருவதாகவும் இதனை கட்டுப்படுத்தும் பணியில் அவுஸ்திரேலிய தீயணைக்கும் படையினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அங்கிருந்து கிடைத்த தவல்கள் தெரிவிக்கின்றன. (பி-2)

... ஒருநாள் போட்டி ... போட்டிகளில சிறப்பாக ... செய்ததற்காக, சிறந்த பந்து வீசசாளருக்கான விருது சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கிற்கு வழங்கப்பட்டது.

## தி.மு.க – பாரதியஜனதா முரண்பாடு விரிவடைகிறது

(புதுடில்லி)

ஆட்சியில் இருக்கின்ற பாரதிய ஜனதாக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையிலான உறவில் கடுமையான விரிசல் ஏற்பட்டுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியிலுள்ள துணைப் பிரதமர் அத்வானி தலைமையிலான குழுவினர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நெருக்கமான தொடர்புகளை வைத்திருப்பதையடுத்தே இந்த விரிசல்கள் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை அண்மைக்காலமாக தமிழக பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அதன் தலைவர் கருணாநிதியையும் பகிரங்கமாக விமர்சித்து வந்தமை குறிப்பிடத் தக்கது.

அதேசமயும், பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசிலிருந்து திராவிட முன்னேற்றக்கழகம் வெளியேறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. (பி-2)

## அமெரிக்கா செல்லும் வெளியார் அங்கு பதிவு செய்ய வேண்டும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவுக்குச் செல்லும் மேலும் 5நாடுகளைச் சேர்ந்த ஆண்கள் அமெரிக்கப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்வதோடு விரல் அடையாளங்களையும் பதிந்து கொள்ள வேண்டுமென்றும் அமெரிக்க நீதித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி பங்களாதேஷ், எகிப்து, இந்தோனேஷியா, ஜோர்தான், குவைத் ஆகிய நாடுகள் இந்தப் பதிவு செய்யும் பட்டியலில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் இச்சட்டத்தின்படி 23நாடுகளைச் சேர்ந்த 16வயதிற்கு மேற்பட்ட ஆடவர்கள் அனைவரும் அமெரிக்கா சென்றால் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம் என்று அமெரிக்கா முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடைய அல்லது அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் நாடுகளே இந்தப் பட்டியலில் இடம் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (பி-2)

## ஈராக் விமானங்களுக்கு தடை செய்யப்பட்ட பகுதியில் ஆயுத சோதனைகள் ரத்து

(பாக்தாத்)

ஐக்கிய நாடுகளின் ஆயுத சோதனையாளர் ஈராக்கின் விமானங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ள பிரதேசத்தில் சோதனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ரத்துச் செய்துள்ளனர்.

இந்தப் பகுதியில் சோதனை மேற்கொள்ளும் போது தமது ஹெலிகொப்ரர்களுடன் ஐக்கிய நாடுகளின் ஹெலிகொப்ரர்கள் இணைந்து செல்ல வேண்டுமென ஈராக் அறிவிததிருந்ததையடுத்தே ஆயுத சோதனையாளர்கள் இத்தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

விமானங்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதிகளை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் படைகள் கண்காணித்து வருவதுடன் அந்தப் பகுதியூடாக பறக்கும் ஈராக்கிய விமானங்களைத் தாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இப் பகுதிக்குள், ஈராக்கியர்கள் செல்லக் கூடாதெனவும், அமெரிக்கா தடைவிதித்துள்ளது. (பி-2)



கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. தென்னிந்திய மாநிலங்களைத் தவிர வட மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் ஐயப்பனைத் தரிசிக்க வருகின்றனர். மகரஜோதியை முன்னிட்டு சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு வந்த பக்தர்களின் கூட்டத்தைப் படத்தில் காணலாம்.

ஐ.நா.சோதனையாளர்கள்

## அறிக்கை சமர்ப்பித்த பின்னர் விஷேட பேச்சுவார்த்தை நடக்கும்

அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணக்கம்

(லண்டன்)

ஈராக்கில் ஆயுதசோதனை மேற்கொள்ளும் ஐக்கிய நாடுகளின் சோதனையாளர்களின் அறிக்கை கிடைத்த பின்னர்அது தொடர்பான விஷேட பேச்சுவார்த்தையொன்றை நடத்த அமெரிக்காவும் பிரித்தானியாவும் தீர்மானித்துள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 31ம்திகதி மேரிலாண்ட் கம்டெனிற்றில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷும் பிரித்தானியப் பிரதமர் டொனி பிளேயரும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

ஈராக் ஆயுதசோதனை தொடர்பான அறிக்கை எதிர்வரும் 27ம்திகதி ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபையில்ஆயுத சோதனையாளர்களால் சமர்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை இந்த அறிக்கையை சமர்ப்பிக்கும் நடவடிக்கை பிற்போடப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## விண்ணில் இலக்குகளை குறிவைத்துத் தாக்கும்

### "ஆகாஷ்" ஏவுகணை இந்தியா வெற்றிகர சோதனை

(புதுடில்லி)

ஏவுகணைத் தயாரிப்பில் அதிதீவிரமாக ஈடுபட்டுவரும் இந்தியா, நேற்று முன்தினம் ஆகாஷ் என்ற குறுந்தூர ஏவுகணையொன்றை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.

தரையிலிருந்து விண்ணிலுள்ள இலக்குகளைத் தாக்கக் கூடிய இந்த ஏவுகணையைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான டி.ஆர்.டி.ஓ என்ற அமைப்பே தயாரித்துள்ளது.

இந்த ஏவுகணை 50கிலோ எடையுள்ள வெடிமருந்தைத் தாங்கிச் செல்லக்கூடியது என்றும், 25கிலோ மீற்றர் தூரம்வரை சென்று விண்ணிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கக் கூடியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஒரு வாரத்திற்கு முன் இந்திய "அக்கினி - 1, அக்கினி - 3 என்ற இரு நவீனரக ஏவுகணைகளை வெற்றிகரமாகப் பரிசோதித்திருந்தது.

அத்துடன் இவற்றைப் பயன்படுததும் நோக்கில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கத் தயாராகவுள்ளதாக ஏவுகணைத் தயாரிப்பாளர்கள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

### ஹக்கீம் கொலை முயற்சி

# 11 சந்தேக நபர்கள் மீது பொலிஸ் தீவிர விசாரணை

(சிலாபம்)

அண்மையில் சிலாபத்தில் கைதுசெய்யப்பட்ட 11 நபர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை கொலை செய்யும் சதியில் சம்பந்தப்பட்டவர்கள்தானா என்பதை தீர்மானிப்பதற்கான தீவிர விசாரணைகளை இரகசியப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கைதான நபர்களை விளக்கமறியலில் வைக்கும்படி சிலாபம் நீதிபதி உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவுமேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இக்கைதிகள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களில் ஒருவரும் நீர்கொழும்பு முனிசிப்பல் கவுன்சில் முன்னாள் உறுப்பினருமான ஹஸ்மிதாஸ் என்பவர் சிலாபம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்த அல்விஸ சாட்சிக் கூண்டிலிருந்தபடி அச்சுறுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து நீதிபதி அவருக்கு 500 ரூபா அபராதம் விதித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் புத்தளம் மேயருமான கே.ஏ. பாயிஸைக் கொலை செய்யவும் இவர்கள் முயற்சி செய்தார்கள் என்பது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். முக்கிய சந்தேக நபர்களில் ஒருவராக அடையாளம் காட்டப்பட்டுள்ள பி.எம். நியாஸ் என்பவர் சிலாபத்தில் முன்னர் நிகழ்ந்த சிங்கள முஸ்லிம் கலவரத்தின் போது கே.ஏ. பாயிஸின் உயிருக்கு ஆபத்து விளைவிக்க முயன்றவர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

கடந்த சனியன்று கொழும்பு இனவில வீதியில் பொலிஸார் இந்த 11 சந்தேக நபர்களையும் துரத்திப் பிடித்ததாகவும் அவர்களிடமிருந்து ஒரு ரி-56 துப்பாக்கி, மூன்று மெஷின் துப்பாக்கிகள் ஒன்று, ரி-56 தோட்டாக்கள், இரு தானியங்கித்துப்பாக்கிகள் ஆறு, எறிகுண்டுகள் போன்றவை கைப்பற்றப்பட்டதாகவும் அவர்கள் கூறினர். (பி)

# சமஷ்டி அமைப்பு ஈழ ராஜ்ஜியம் உருவாகுவதற்கு வழிவகுக்காது

### ஐரோப்பிய யூனியன் பா. உ. தெரிவிப்பு

(கொழும்பு)

சமஷ்டி அமைப்பு, மாநிலங்களை நிர்வகிப்பதற்கு சுலபமான வழிமுறையாகும் என்று ஐரோப்பிய யூனியனின் பாராளுமன்ற உறுப்பினர் நிறைஞ்சன் தேவாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இவர் செய்தியாளர்களிடையே இது தொடர்பில் மேலும் கருத்துக் கூறுகையில்,

பல செல்வந்த நாடுகளும் வளர்முக நாடுகளும் சமஷ்டி முறையினைப் பின்பற்றி வருகின்றன.

இந்நிலையில், சமஷ்டி அமைப்பு ஈழராஜ்ஜியம் உருவாகுவதற்கு வழிவகுக்கும் என்று தென் இலங்கையர்கள் பலர் தவறான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

சமஷ்டி அமைப்பு பற்றிய எனது சொந்த அனுபவத்தின்படி இவ்வாறு எண்ணுவது தவறானது.

சமஷ்டி அமைப்பின் பிரகாரம் மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மத்திய அரசாங்கம் நிர்வாகிக்கும்.

அந்த வகையில் பாதுகாப்பு நிதி, வெளிநாட்டு உறவுகள் மற்றும் கொள்கை தீர்மானங்கள் என்பனவற்றை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும்.

அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் கனடா, இந்தியா, உட்பட பலநாடுகள் சமஷ்டி ஆட்சி முறையினையே கடைப்பிடிக்கின்றன என்றார்.

(உ-10)

### வேலையற்ற பட்டதாரிகளுக்கு

# விரிவான பயிற்சி அளிக்கத் திட்டம்

(கொழும்பு)

வேலையற்றுஇருக்கும்பட்டதாரிகளுக்கு விரிவான பயிற்சியை அளிக்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஒரு வருடத்தில் சுமார் 5 ஆயிரம்பட்டதாரிகளுக்காவது தொழில்பயிற்சிகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும் எனவும் பயிற்சிக்காலத்தின் போது பயிலுநர்களுக்கு செலவுப் படியும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, பிராந்திய மட்டத்தில் ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்திற்கு அரசாங்கத்திடம் இருந்து உதவிகள் பெற்றுக் கொள்ளப்படும் என தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல்களை தொழில் அமைச்சுநடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-10)

# சிறுவர் திறன்விருத்திப் போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்புநிதியத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள சிறுவர்களுக்கான திறன்விருத்திப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையிலும் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை மு.ப. 10.00 மணிக்கு வட இந்துமகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (உ-3)

# தெற்கு அபிவிருத்திக்கும் உலக வங்கி உதவும்

### துணைத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசியமட்டத்தில் சுபீட்சத்தையும், அபிவிருத்திகளையும் மேற்கொள்வதன் ஓர் அம்சமாக தென்பகுதி அபிவிருத்திக்கும் உதவிகள் வழங்கப்படும் என உலக வங்கியின் துணைத்தலைவி மீக்கோ நிசுமிசு தெரிவித்துள்ளார்.

அண்மையில் அம்பாந்தோட்டை நகருக்கு விஜயத்தினை மேற்கொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்; சமாதான முயற்சிகள் வலுப்பெற வேண்டுமானால், தேசிய ரீதியில் பொருளாதார அபிவிருத்திகள் முக்கியமானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-8)

# கையடக்கத் தொலைபேசி நடைமுறைகள் குறித்து விளக்கம் போதாது

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளின் உள்வரும் அழைப்புக்களுக்கான நடைமுறைகள் தொடர்பாக பாவனையாளர்களுக்கு பூரண விளக்கத்தை அரசு கொடுக்கத் தவறியதனாலேயே இதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாக தொலைத்தொடர்பு பொறியியலாளர் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசிகளின் உள் வரும் அழைப்புக்களுக்கான கட்டணத்தை மக்கள் தொடர்பாடல் அமைச்சு இம்மாதம் ஆரம்பம் முதல் இரத்து செய்வதாக அறிவித்திருந்தது.

ஆனால், இத்தொலைபேசிகளின் உள்வரும் அழைப்புக்களுக்கான இரத்துச் செய்யும் திட்டத்தை வாபஸ் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இத்திட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை பின் தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக தொலை தொடர்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(உ-8)

### பதிவுப் புத்தகத்தை

# பெறலாம்

(கலவியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் சிறுவணிக முகாமைத்துவ கற்கை நெறி 2002/2003 ஆம் கல்வி ஆண்டுக்கு பதிவு செய்த மாணவர்கள் தமது பதிவுப்புத்தகங்களை பெற்றுக் கொள்ளும் படிபிராந்திய நிலைய இயக்குநர் ஆ.ஞானேந்திரன் கேட்டுள்ளார். (உ-54)

### ஆடையில் தீப்பற்றிய

# பெண் மரணம்

(அச்சுவேலி)

தேநீர் தயாரிப்பதற்குஅடுப்பு மூட்டிய பெண்ணின் ஆடையில் தவறுதலாக தீ பரவியதால் அப் பெண்மணி, எட்டு நாட்களின் பின் மந்திகை ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இந்த மரணம் கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது பருத்தித்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த அரசரட்ணம் புவனேஸ்வரி (வயது 41) என்பவரே மரணமானவராவார்.

இது சம்பந்தமான விசாரணையை, நடாத்திய வடமராட்சி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இளையப்பு-கிருபா கரசூரியன் உடலில் தீபிடித்து 70வீதம் பாதிக்கப்பட்டு, இரத்தக்கட்டி, சுவாசத்தைதடைப்படுத்தியதனால் உண்டான மரணம் எனத் தீர்ப்பளித்து சடலத்தை பருத்தித் துறை கோரியடி மயானத்தில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார் பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் எல். சி. பெரேரா சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

(க-14)

### வைத்தியசாலைகளுக்கு மின் இணைப்பு வழங்க உறுதி

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம் மற்றும் சங்கானை வைத்திய சாலைகளிற்கு இவ் வருடத்திற்குள் மின்சார இணைப்புக்கள் பெறுவதற்கும் ஏற்ற நிதி ஒதுக்கித்தரப்படும் என பதில் வலிமேற்கு பிரதேச செயலக பதில் பிரதேச செயலர் இம் மாதம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் உறுதியாக தெரிவித்துள்ளார்.

இவ்வைத்திய சாலையில் தினமும் அதிகளவு நோயாளிகள் வருகை தருவதாகவும் மின்சாரம் மிகவும் அத்தியாவசியமானது எனவும் மேற்படி பிரதேச செயலகத்திற்கு சங்கானை சுகாதாரவைத்திய அதிகாரிடாக்டர் கே. கணேஸ்வராஜா கடிதம் மூலம் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

(க-252)

### வன்னிப் பிரதேச

# தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றிய கருத்தரங்கு

(வவுனியா)

இலங்கைக் கலைக் கழக தமிழ் இலக்கியக் குழுவுடன் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்கம்கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேசுரர் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம், வவுனியா கல்வியியற் கல்லூரி, வவுனியா தமிழ் இலக்கிய வட்டம், வவுனியா இந்துமா மன்றம் ஆகியன இணைந்து நடாத்தும் வன்னிப் பிரதேசத் தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றிய கருத்தரங்கும் கலை நிகழ்ச்சிகளும் இம் மாதம் 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி 2 ஆம் திகதி வரையான மூன்று தினங்கள் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கவிதை நாட்டாரியல் சிறுகதை, நாவல் வரலாறு பண்பாடு ஆகிய துறைகளில் இலங்கையில் உள்ளபல்கலைக்கழகங்களின் கல்விமான்களும் எழுத்தாளர்களும், ஆய்வறிஞர்களும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கவுள்ளனர்.

(உ)

### தமிழ்ப் பகுதிகளில்

# தொழில் நீதிமன்றங்கள் தமிழ்மொழியில்செயற்படும்

(கோட்டை)

யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய தொழில் நீதிமன்றம் நிறுவப்படும் என்று தொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தமிழர்கள் அதிமாகவாழும் பகுதிகளில் தொழில் நீதிமன்றங்களுக்கு தமிழ்ப் பேசும் நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும்இந்த நீதிமன்ற நடவடிக்கைகள் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் நடத்தப்பட வேண்டுமெனக் கோரப்பட்டாலன்றி தமிழ்மொழியிலேயே நடத்தப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

நாடு முழுவதுமாக 16 புதிய தொழில் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்றும், தொழில் நீதிமன்றங்களில் குவிந்துகிடக்கும் தொழில் தகராறுகளை விரைவாகத் தீர்த்து வைப்பதற்காக இவை அடுத்த மூன்று மாதங்களுக்குள் அமைக்கப்படும் என்றும் அறியப்படுகின்றது.

தற்பொழுது நாட்டில் 22 தொழில்நீதிமன்றங்கள்செயல்படுகின்றன. என்றும் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு வெகுகாலம் பிடிப்பதால் குவிந்து கிடக்கும் வழக்குகளை இப்போதிருக்கும் நீதிமன்றங்களால் விரைவில் தீர்த்துவைக்க முடியாது என்றும் தொழில் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க நீதியமைச்சின் அனுசரணையுடன் முன்வைத்த பிரேரணையொன்றின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சொன்னார்.

இந்தயோசனையைஏற்கனவே அமைச்சரவை அங்கீகரித்திருப்பதாகவும் அதற்கான நிதி வசதிகளை திறைசேரிவிடுத்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

(பி)

# வேதாகம குருகுல கலாசாலை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் குருநாதர் சுவாமி கோவிலில் அமைக்கப்பட்டுள்ள வேதாகம குருகுல கலாசாலை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சினால் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட இவ் வேதாகம குருகுலகலாசாலையைஅமைச்சர் தி. மகேஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரால்திறந்து வைக்கப்படவுள்ளது.

சர்வதேசஇந்துமத குருமார் ஒன்றியத்தினால் நிர்வகிக்கப்படும் இக்குருகுலத்தில் குருக்கள்மார் முறையாக கற்பதற்காக சகல வசதிகளோடு வேதாகம சைவ சித்தாந்த துறையில் அறிவும் ஆற்றலும் பெற்ற விரிவுரையாளர்கள் கல்வி ஊட்ட உள்ளனர்.

இக்கல்லூரியின் அதிபராக சகல தகுதிகளும் உடைய ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

இங்கு கணனி வசதிகள் மற்றும விரிவுரைகளுக்கு ஏற்ற சாதனங்கள் ஏனைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் இக்கல்லூரியில் பயிற்சி பெறுபவர்கள் ஈழத்திலுள்ள சிவாலயங்களில் சிவாச்சாரியார்களாக பணிபுரிவதற்கு அமர்த்தப்படுவார்கள்எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# இலங்கையின் சமஷ்டி அமைப்பு இன ஒற்றுமையை பேண வேண்டும்

## கலாநிதி டியர்மார் ஸ்ரைட்சல் யாழ். பல்கலையில் தெரிவிப்பு

(தென்மராட்சி)

**இலங்கைக்கு ஏற்ற ஒரு சமஷ்டி மாதிரியை உருவாக்குவதில் எம்மிடையே நல்லெண்ணமும், புரிந்துணர்வும் உருவாக்கப்பட வேண்டும். எமது பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் ஏற்ற வகையிலே அமைந்த சமஷ்டி முறைமை உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.**

இவ்வாறு பிரட்றிச் ஈபேட் மன்றத்தின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி டியர்மார் ஸ்ரைட்சல் யாழ். பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில் நடைபெற்ற ''சமஷ்டி மயப்படுத்தலில் சந்தர்ப்பங்களும் சவால்களும்'' எனும் தலைப்பிலான மக்கள் கருத்தரங்கின் நோக்கங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

பிரட்றிச் ஈபேட் மன்றமும் யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்திய இம் மக்கள் கருத்தரங்கம் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றியிருந்தார்.

கலாநிதி டியர்மார் ஸ்ரைட்சல் அங்கு தொடர்ந்து கூறுகையில்:

இலங்கையிலே வாழ்கின்ற சமூகங்கள் ஒருவரையொருவர் புரிந்துணர்வோடு அணுகுவதற்கும் ஒருவருடைய பிரச்சினைகளை மற்றவர் சரியாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலும் ஒருவருடைய அடையாளத்தை மற்றவர்கள் ஏற்று அங்கீகரிக்கக்கூடியவகையிலும் இலங்கையில் சமஷ்டி முறை அமைவதோடு முழு நாடும் நாம் இலங்கையர் என்ற அடிப்படைக் கோட்பாட்டைக் கொண்டதாக இலங்கையினுடைய சமஷ்டி முறை அமைதல் வேண்டும்.

இலங்கையர்களிடையே இன்று நிலவக் கூடிய புரிந்துணர்வு அற்றதன்மை அச்சம் பீதி, சந்தேகம், போன்றவற்றை நீக்கக் கூடியவகையிலே அனைத்து இனங்களும் ஒருங்கிணைந்து வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கக் கூடிய வகையில் தான் அரசும் புலிகளும் ஈடுபட்டுள்ளன.

இலங்கையிலுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நீங்கள் ஒரு சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று தான் நான் கூறுவேன் என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தற்காலச் சமாதான நடைமுறைகள் பற்றிமதிப்பீடுகள் எனும் தலைப்பில் உரையாற்றும் போது,

இலங்கையின் அரசியலமைப்பில் கூறப்பட்ட விடயங்கள் உரியவகையில் அமுலாக்கப்படாமையினால்தான் நாட்டில் பல பிரச்சினைகள் எழுகின்றன. முக்கியமாக தமிழ் மொழி அமுலாக்கல் பற்றிக் குறிப்பிடலாம் நாட்டில், குறிப்பாக யாழ். குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களில் நாம் எமது மொழியில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யக் கூடிய நிலை இன்னமும் உருவாகவில்லை. படித்தவர்கள் கூட பொலிஸ் நிலையங்களில் படிக்காதவர்கள் போலவே நடத்தப்படுகின்றார்கள்.

சமாதான நடைமுறைகள் வந்ததும், தற்போது பொலிஸ் பதிவு, போக்குவரத்துக்கான பயண அனுமதி முறைமையும் நீங்கியுள்ளமை வரவேற்கக் கூடியதாகும். இருப்பினும் இன்னமும் பல செய்யப்படவேண்டியுள்ளன எனக் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அங்கு கருத்துரையாற்றும் போது;

நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் கல்விமான்கள் எத்தகைய பங்களிப்புகளும் செய்யவில்லை. இந்த நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் இப் பிரச்சினையில் நாம் ஈடுபடாமை தவறானதாகும். எமது நாட்டின் பிரச்சினையை சர்வதேசம் பார்க்கவும்- கவனிக்கவும் நாம் அனுமதித்துவிட்டு நாம் இருக்கின்றோம். இது ஆரோக்கியமானதல்ல என்றார்.

இக்கருத்தரங்கில் கொழும்பு சட்டக்கல்லூரியின் சட்டபீடத் தலைவர் வீ. ரீ. தமிழ்மாறன், றோகான் எதிரிசிங்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.பி. தேவராஜ் உட்பட வேறுபலரும் கருத்துரைகள் வழங்கினர்.

(க-77)

## வட-கிழக்கு கரப்பந்தாட்ட வீரர்களுக்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து கரப்பந்தாட்ட வீரர், வீராங்கனைகளை அழைத்து இவர்களுக்கு கரப்பந்தாட்டம் தொடர்பான விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு தேசிய இளைஞர் சேவை மன்றம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை மன்னார் மாவட்டத்திற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் பரிமாற்றச் செயற் திட்டத்தின் கீழ் கோமாகம பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இவர்களை மன்னார் மாவட்டத்திற்கான தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அணித்தலைவர்கள் வரவேற்று உபசரித்ததுடன் கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளனர்.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றம், அதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பங்களிப்பு என்பன தொடர்பாக இக்கலந்துரையாடலில் பேசப்பட்டன.

(உ-10)

## தேசிய கீதத்தை மாற்ற முடியாது

### கொடித்துவக்கு அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய கீதத்தின் இசை அல்லது பொருளடக்கத்தை அரசியல் யாப்புத் திருத்தம் இல்லாமல் மாற்ற முடியாது என மனிதவள கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக் அலுவிகாரவிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்

அக்கடிதத்தில் தெரிவிக்கப்படுவதாவது,

எந்த ஒரு நாட்டிலும் தேசிய கீதத்தை இசைப்பது அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமையாகும்.

இதனால் இதைப் பாடும் தனிப்பட்ட நபரிற்கோ அல்லது ஒரு சிலரிற்கோ கட்டுப்பாடுகளை விதிப்பது நல்லதல்ல.

தேசிய கீதத்தை வர்த்தக அல்லது தனிப்பட்ட திட்டத்திற்காக பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, லேக்கவுஸ் நிறுவனம் தேசிய கீதத்தை ஒலிப்பதிவுசெய்ய அண்மையில் நடவடிக்கை எடுத்துள்ளமை குறித்து பல அமைப்புக்கள் கருத்து வெளியிட்டிருந்தன. அந்த வகையில் இவ் அமைப்புக்கள் மீது தேசிய கீதம்பற்றி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு கலாசார அமைச்சிடமே உள்ளது என்று கூறியிருந்தன.

ஆனால் தேசியக் கொடி தேசிய கீதம் தொடர்பான விவகாரங்களுக்கு உள்துறை அமைச்சே பொறுப்பாக இருக்கிறது என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(உ-10)

## கடனட்டை மோசடி தடுக்க இன்ரபோல் உதவி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் 'கிறடிட் காட்' மோசடிகளைத் தடுக்க சி. ஐ. டி. பொலிஸார் இன்ரர் போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர்.

அண்மையில் பாரிய கிறடிற் காட் மோசடியொன்று கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம் மோசடியில் இளம் வர்த்தகர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் நான்கு பிரபல கோடீஸ்வர வர்த்தகர்களை கைதுசெய்ய விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-3)

## சமுர்த்தி சிறு குழுக்களில் 6500 குடும்பங்கள்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்திச் சிறு குழுக்கள் மூலம் கடந்த ஆண்டில் 10 இலட்சம் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவில் 5 பேர் கொண்ட சிறு குழுவில் இது வரை 6 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அத்துடன், மேற்படி பிரிவில் இன்றுவரை ஆயிரத்து 350 சிறு குழுக்களும் 115 சமுர்த்திச் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது சமுர்த்தி வங்கி விரைவில் பண்டத்தரிப்பில் திறக்கப்படவுள்ளது.

மானிப்பாயில் திறக்கப்படவுள்ள மற்றைய சமுர்த்தி வங்கிக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

(உ258)

## நெல் கொள்வனவிற்கு 50 மில்லியன்கள் தேவை

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் போது கிடைக்கவுள்ள 60 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்ய 50 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக கிளிநொச்சி அரச அதிபர் திறைசேரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்முறை 18 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த பெரும்போகத்தைவிட இம்முறை இரட்டிப்பு நெற்செய்கை செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 31 ஆயிரம் ஹெக்டயர் வயல் நிலங்களில் 18 ஆயிரம் ஹெக்டயர் மாத்திரமே நெற்செய்கை பண்ணக்கூடியதாக உள்ளது. ஏனைய பகுதிகளில் நிலக்கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் இருப்பதாக கூறப்படுகிறது என மேலும் தெரிவித்துள்ளார்.

(க-3)

## நோர்வேயில் இலங்கையருக்கு தொழில் வாய்ப்புகள்

(கொழும்பு)

இலங்கையருக்கு நோர்வே நாட்டில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பாக நோர்வே அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இது விடயத்தில் தமது வெளிநாட்டு அமைச்சு ஆராய்ந்து வருவதாக நோர்வே தூதரக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பத்துறையில் இரண்டு வருட பயிற்சிக்குப் பின்னர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இதற்கான திட்டம் வகுப்பது குறித்து ஆராய்ந்து வரப்படுகிறது

இலங்கையர்களுக்கான இத் திட்டத்தில் குடிவரவு விடயங்களிலும் சில ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. இதனால் தொழில் முயற்சி திட்ட வகுப்புக்கு சிறிது காலம் எடுக்கும் என மேலும் தெரிவித்துள்ளார்.

நோர்வே நாட்டில் தற்சமயம் பல இலங்கையர் ஊடகத்துறைமுதலான பல்வேறு துறைகளில் பயிற்சிகளை பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது (க-03)

## இலங்கையில் சமாதானம் இருதரப்புமே ஆர்வம்

### பிரித்தானிய தூதர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசும், தமிழீழவிடுதலைப் புலிகளும் தற்போது மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் மிகுந்த ஆர்வத்துடனும் உறுதியுடனும் இருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளதென்று பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனை நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் சந்தித்தபின் கருத்துத் தெரிவித்தபோதே பிரித்தானிய தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ் மேலும் கருத்துத்தெரிவிக்கையில் கூறியதாவது:

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனுடன் பேசியவிடயம் தொடர்பாகவும் அவரது கோரிக்கை தொடர்பாகவும் எமது அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறவுள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ம)

## தெற்கிலிருந்து வந்தோர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தெற்கிலிருந்து யாழ்ப்பாணம் வருகை புரிந்த சிங்கள சகோதரர்கள் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் சுற்றாடல் பகுதியை நேற்று காலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட பெருமளவிலானோர் இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

'சமாதான இட்டசக்தி' என்ற பெயரைக் கொண்ட சமூகம், சமய நிலையத்தினரே இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (க)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்குப்பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பதில் உதவிப் பிரதேச செயலர் த. தேவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-3)

# பெல்ஜியத்தின் சமூகப் பாராளுமன்ற முறை இலங்கைக்கும் பொருந்தக்கூடிய ஒன்று

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

பெல்ஜியத்திற்கு ஏற்பட்டுள்ள சமஷ்டிமுறை இலங்கைக்கும் பொருத்தமுடையது என்ற நிலைப்பாடு அரசியல் கட்சிகளின் மத்தியிலும் ஏற்பட ஆரம்பித்துள்ளதாக பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி முறை குறித்து ஆராய்வதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள. அரசாங்க எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப்புலிகள், அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அண்மையில் பெல்ஜியத்திற்கு விஜயம் செய்தபோதே அக்குழுவில் அங்கம்வகிக்கும் அமைச்சர் சந்திரசேகரன் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

பெல்ஜியத்தில் உள்ள பல பாராளுமன்றங்களுக்கு சென்றுள்ள நாம் அங்கிருக்கின்ற சமஷ்டி முறை பற்றி பேசியுள்ளோம்.

அத்துடன் மிக சிக்கலான பிரச்சினைகள் பற்றி ஒரு உடன்பாட்டிற்கு வரமுடியாதுவிட்டாலும் சமஷ்டி ஆட்சி இலங்கைக்கு ஏற்புடையது என்ற ஒரு நிலைப்பாட்டிற்கு வர அனைத்து அமைப்புகளும் உடன்படும் வகையில் முயற்சி செய்து வருகிறோம்.

இவற்றைவிட பெல்ஜியத்தில் உள்ள சமூகப் பாராளுமன்றத்தில் உள்ள நடைமுறைகளும் எமது கவனத்தை ஈர்த்தள்ளது.

இச்சமூகப் பாராளுமன்றில் ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகள் தங்களின் சமூகப் பிரச்சினைகள்பற்றிப் பேசுவதற்கு தனியான பாராளுமன்றம் அமைந்துள்ளது.

இது எமது நாட்டிலும் அமையும் ஆனால் தமிழர், முஸ்லிம்கள், மலையக மக்கள், சிங்களவர், ஆகியோர் தமது பிரச்சினைகளை தமது சமூக பிரதிநிதிகள் ஊடாக சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்த முடியும் என்ற எண்ணம் எமக்கிடையே எற்பட்டுள்ளது.

இதேவேளை, நாம் இவ்வாறு பலநாடுகளுக்கு விஜயம் செய்வதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் சமஷ்டிமுறைபற்றி விளங்கிக் கொள்ளாத பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பலர் சமஷ்டி முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டால் அது தனிநாட்டிற்கான வாசலைத்திறந்து விடும் என்று தவறான முறையில் பிரசாரங்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே இதற்கு முடிவுகாணும் வகையில் சமஷ்டி என்பது சகல சிறுபான்மையின மக்களின் உணர்வுகளையும் அங்கீகரிக்கின்ற ஒன்றாக இருக்கிறது என்பதை இலங்கை மக்களுக்கு குறிப்பாக பெரும்பான்மை இனத்தவரிற்கு தெளிவுபடுத்துவதற்கு சகலபாராளுமன்ற உறுப்பினர்களினதும் இவ்விஜயம் பயன்படும் என்ற வகையில் நாம் இவ்வாறு பல நாடுகளுக்கும் விஜயம் மேற்கொண்டு வருகிறோம் என்றார். (க.10)

## பேச்சுவார்த்தைகளின் முன்னெடுப்புக்கு

# சர்வதேச சமூகம் அளிக்கும் ஆதரவுக்கு த. வி. கூட்டணி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அமைதி முயற்சிகளை சில சக்திகள் சீர்குலைக்க எடுத்து வரும் முயற்சிகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி மிகுந்த கவலை தெரிவித்துள்ளது.

இந்தசக்திகள் தொடர்ந்தும் பேரினவாதம் இலங்கையில் முனைப்படைவதையே விரும்புகின்றனவென்றும் இலங்கையில் பல்லின கலாசாரங்கள் நிலவுவதை இவைகள் மறுக்கமுயல்கின்றனவென்றும் கூட்டணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ம் திகதி வவுனியாவில் தமிழர்விடுதலைக் கூட்டணியின் மத்தியக்குழு அதன்தலைவர் வி. ஆனந்தசங்கரியின் தலைமையில் கூடி ஆலோசனைகள் நடத்தியதன் பின்னர் நிறைவேற்றிய திர்மானத்தில் மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்விபரத்தை கூட்டணி செயலாளர்நாயகம் ஆ.சம்பந்தன் அறிக்கையொன்றில் வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசுக்கும் - தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் அமைதிப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள கணிசமான முன்னேற்றம் காணப்படுவது குறித்து கட்சி மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. பேச்சுகளில் இருதரப்பினருமே காட்டியுள்ள விட்டுக்கொடுக்கும் நிலைப்பாடானது பிரச்சினையில் நீதியானதும் நிலையானதுமான ஒரு முடிவினை காண்பதற்கு அவர்கள் உறுதிகொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. இந்தப் பேச்சுக்கள் போர்நிறுத்தம் நிலைபெறவும், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கவும் அழிக்கப்பட்ட வடக்குக்கிழக்குப்பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பவும் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக் காணவும் வழிவகுப்பதற்கு பாடுபடுவதென்ற தனது நிலைப்பாட்டை கூட்டணி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

**சர்வதேச சமூகம்**

அமைதி முயற்சிகள் தொடந்தும் முன்னெடுக்கப்படுவதற்கு சர்வதேச சமூகம் அளித்துவரும் ஆதரவை கூட்டணி பாராட்டியுள்ளது. சர்வதேச ஆதரவானது இதுவரை எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்களை அங்கீகரிப்ப தாக அமைந்துள்ளதுடன் அமைதி முயற்சி வெற்றிபெற வேண்டுமென விரும்பும் நாட்டின் பல்வேறு இனமக்கள் மத்தியிலும் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் எற்படுத்தியுள்ளது என்று தீர்மானம் குறிப்பிட்டுள்ளது

**சந்தர்ப்பவாதம்**

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜனத்தா விமுக்தி பெரமுனைக்குமிடையில் இணைப்பொன்றை உருவாக்க எடுக்கப்படும் முயற்சி சந்தப்பவாதமும் கொள்கை யீனமான ஒரு போக்கு என்றும் கூட்டணி சாடியுள்ளது. இம்மாதிரியான ஒரு கட்டமைப்பானது இறுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முடிவுக்கே வழிவகுக்கும் என்று குறிப்பிட்டுள்ள த.வி. கூட்டணி.

இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்மென்று மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இது ஒவ்வொரு இடம்பெயர்ந்த மக்களதும் அடிப்படை மனித உரிமையாகும். இவர்களைத் தொடர்ந்தும் அகதிகள் நிலையில் வைத்திருப்பதானது அவர்களின் மனித கௌரவத்தையும் சுதந்திரத் தையும் மீறுப்பதாகும். எனவே அர சாங்கம் இந்த மக்களை மீளக்குடி யமர்த்துவதற்கு விரைந்து செயல்ப்பட வேண்டும் என்றும் கூட்டணி தீர்மானத்தில்கேட்டுள்ளது. (பி)


## 31ம் நாள் நினைவு அஞ்சலி



**வயிரமுத்து நவரத்தினம்**

பிறப்பு 06.07.1923

இறப்பு 21.12.2002

ஆதரித்து வளர்த்த எம் தெய்வமே
அநாதையாய் எம்மை விட்டு எங்கு சென்றாய் – அப்பு
உங்கள் பிரிவால் நெஞ்சம் தவிக்கிறது
உங்கள் நினைவுகள் எம்நெஞ்சை விட்டு அகலாது.

"உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம"

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

தகவல் : வே. பரஞ்சோதி (மருமகன்)

(6471)



## குவாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும்
6 மாத டிப்ளோமா பயிற்சிநெறி

- கேக் ஐசிங.
- கைவேலை.
- உணவுதயாரித்தல
- உடைதயாரித்தல்
- பூவேலை
- FABRIC PAINTING

◆ மேற்படி பயிற்சிகள் அனைத்தையும் பயில்வோருக்கு கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் என்பன இலவசமாகப் பயிற்றுவிக்கப்படும்.

◆ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

◆ இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.

கிழமை நாள் பயிற்சிகள்
காலை 9.30 மணி முதல் பி.ப 1.30 மணிவரை
திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் நடைபெறும்.
சனி, ஞாயிறு பயிற்சிகள்
காலை 9.30 மணி முதல் பி.ப 2.30 மணிவரை நடைபெறும்.

◆ புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வகுப்புகளுக்கு மேலும் மாணவிகள் அனுமதிக்கப்படுவர்.

மேலும் விபரங்களை பி.ப. 2.00 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்

இயக்குநர்

(கி.5646)




கல்விமேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் யாழ். கல்வி வலயத்தில் தலைவர் பேராசிரியர் அ. சண்முதாஸ் தலைமையில் நடைபெறுவதையும், பங்குகொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## உலக கிண்ண கிரி.போட்டி

# ஆரம்ப விழாவில் 5 ஆயிரம்பேரின் நடன விருந்து

(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகளின் 8ஆம் திகதி நடைபெறவுள்ள தொடக்க விழா நிகழ்ச்சியில் இம் முறை 5ஆயிரம் கலைஞர்கள் பங்கேற்று நடனமாடவுள்ளனர்.

இப் பொட்டி அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது.

இவ்நடன நிகழ்ச்சிக்கான அமைப்புகளைஅமெரிக்காவைச் சேர்ந்த டக்ஜாக் என்பவர் கவ னித்து வருகிறார்.

இவர் அட்லாண்டா, சிட்னி ஆகிய இடங்களில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் நடன நிகழ்ச்சிகளை நடத்தியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (உ-3)

# அவுஸ்திரேலிய வீரர் வெற்றி வாய்ப்பை இழந்தார்

(பாரிஸ்)

பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் நகரில் நடைபெறும் உலகக் கிண்ண சம்பியன் நீச்சல் போட்டியில் 50 மீற்றர் குறுந்தூரப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இதுவரை பல சாதனைகள் படைத்து வந்த அவுஸ்ரேலிய வீரர் என். தோப் இழந்துள்ளார்.

உலகச் சம்பியன்கள் போட்டியில் பல தங்கப் பதக்கங்களை வென்றெடுத்த 20 வயதுடைய என்.தோப் இந்தப் போட்டியில் நெதர்லாந்து அணியிடம் தோல்வி கண்டுள்ளார். (க.10)

## இன்று ஒரு தகவல்

# குழந்தைகள் கவனம்!

ஒருவர் மிகவும் அவசரமாகப் போய்க்கொண்டிருந்தார். "எங்கே சார் போகிறீகள்?" என்று கேட்டேன். எனக்கு வேண்டிய ஒருவருக்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்ற செய்தி வந்தது. அதுதான் ஆஸ்பத்திரிக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். பார்த்து விட்டு வரலாமென்று! என்றார். "அப்படியென்றால் கொஞ்சம் இப்படி உட்காருங்கள் சார். சில விபரங்கள் சொல்லுகிறேன். கேட்டுக் கொண்டு போங்கள்" என்றேன். உட்கார்ந்தார் சொல்ல ஆரம்பித்தேன்.

புதிதாகப் பிறந்திருக்கிற ஒரு குழந்தையைப் பார்க்கப் போவதென்றால் அது சாதாரண விஷயமல்ல. அதில் மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். புதுக் குழந்தைக்குப் நோய் சுலபமாகத் தொற்றும். முக்கியமாகக் காற்று மூலமாகப் பரவுகிற நோய்கள் சுலபமாகத் தொற்றும். அதனால் நமக்கு உடம்பு சரியில்லை என்றால் குழந்தையை விட்டுக் கொஞ்சம் தள்ளியே இருப்பது தான் நல்லது. பெரியவர்களைப் பொறுத்தவரை சாதாரணமாக உள்ள கிருமி கூட குழந்தையைப் பொறுத்தவரை மிகவும் மோசமான ஒரு கிருமியாக இருக்கும்.

சில நாடுகளில் எப்படித் தெரியுமா? பிறந்த குழந்தை தூங்கிக் கொண்டிருக்கிற ஓர் அறைக்குப் போக வேண்டுமென்றால். போகிறவர்கள் முகமூடி (Mask) போட்டுக் கொள்ள வேண்டும். காலணிகளை மாற்றிக் கொள்ளவேண்டும். அவ்வளவு சுத்தமாக உள்ளே போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும். பொதுவாகச் சில ஆஸ்பத்திரிகளில் பார்த்தீர்களென்றால், பார்வையாளர்கள் நேரத்திலே, (Visiting Hours) தாயை விட்டுக் குழந்தையைத் தனியாகப் பிரித்து வைத்து விடுவார்கள். எதற்கென்று நினைக்கிறீர்கள்? அந்த நேரம் பலர் வருவார்கள், போவார்கள், அவர்களுடைய கைகால சுத்தமாக இருக்காது. சுத்தமாக இல்லாத கைகள் மூலம் கிருமிகள் பரவும், சுத்தமில்லாத கைகள் என்றால் மண், தூசி படிந்திருக்கிற கைகள் மட்டும்தான் என்று அர்த்தமில்லை, சாலையில் கையை வீசிக்கொண்டு நடந்து வருகிறீர்கள். குழந்தையைப் பொறுத்தவரை அது கூடச் சுத்தமில்லாத கைதான்.

தாயைத் தவிர மற்றவர்கள் குழந்தையைத் தூக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது. தாய் கூட அளவோடு கொஞ்சுவதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். புதிதாக ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிற பெண்ணிடம் மற்றத்தாய்மார்கள் ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள். குழந்தையை அப்படி வளர்க்க வேண்டும் இப்படி வளர்க்க வேண்டும் என்று ஏதாவது "அட்வைஸ்" பண்ணிக்கொண்டே இருப்பார்கள். இப்படிக் கூடுதலாகப் புத்திமதி சொல்வது அந்தப் பெண்ணைக் குழப்பிவிட்டுவிடும். குளறுபடியாயிருக்கும். அதனால் அப்படியெல்லாம் பண்ணக் கூடாது. அந்தப்பெண் ஏதாவது கேட்டால் கூட, டாக்டர் சொல்ல வேண்டிய விபரங்களையெல்லாம் நாங்களே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

புதிதாகப் பிறந்திருக்கிற குழந்தையைத் தான் என்று இல்லை ஒரு நோயாளிக் குழந்தையைப் பார்க்கப் போவதென்றால் கூடமிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு தின் பண்டமோ. விளையாட்டுச் சாமானோ அந்தக் குழந்தைக்கு நாம் வாங்கிக் கொண்டு போவதாக வைத்துக் கொள்வோம். அதை நேராகக் கொண்டு போய் அந்தக் குழந்தையிடம் கொடுக்கக் கூடாது. அதனுடைய அம்மா, அப்பாவிடம் இரகசியமாகக் கொடுங்கள். அவர்கள் முடிவு பண்ணட்டும், குழந்தையிடம் கொடுக்கலாமா வேண்டாமா என்பதை! அவர்களுக்குத்தான் தெரியும் அதனுடைய மனதும், உடம்பும்.

உங்கள் அக்கறையைக் காட்டுவதாக நினைத்துக் கொண்டு குழந்தையின் வாயில் எதையும் கொண்டு போய்ப் போடாதீர்கள். போகிற பொழுது உங்கள் வீட்டுக் குழந்தையையும் அழைத்துக்கொண்டு போகாதீர்கள். இது நோயை வாங்கிக் கொண்டு வரும், அல்லது புதிதாக ஒரு நோயை அதனிடம்கொடுத்துவிட்டு வரும். என்னதான் உங்களுக்குப் பழக்கமான குழந்தையாக இருந்தால் கூட அதற்கு விருப்பம் இல்லை என்றால் பேசாதீர்கள். அங்கு போய் அதனுடைய பள்ளிக் கூடத்தை ஞாபகப்படுத்திக் கொண்ருக்காதீர்கள். நோயிலே இருக்கிற பொழுது பாடசாலையைப் பற்றிப் பேச அது விரும்பாது.

ஆஸ்பத்திரியை விட்டுப் புறப்படுகிற பொழுது குழந்தையிடம் சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. அதோடு அப்பா, அம்மாவிடம் சொல்லிவிட்டுப் புறப்படுங்கள். நம்மிடம் சொல்லவில்லையே என்று குழந்தை கோபித்துக் கொள்ளாது. சமூக சம்பிரதாயத்தைப் பற்றி அது கவலைப்படுவதில்லை. இப்படி எல்லா விபரமும் என் எதிரில் உட்கார்ந்திருந்தவரிடம சொல்லி முடித்தேன். "மிகவும் நன்றி சார்" என்று சொல்லி விட்டு அவர் புறப்பட்டார். குழந்தைகள் கொஞ்சம் வளர்கிற வரையும் தான் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இல்லை. வளர்ந்த பிறகு இன்னும் எச்சரிக்சையாக இருக்க வேண்டும்.

ஒரு பையன் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்தான். முகம் பூராவும் நகத்தால் கீறியிருந்தது. அப்பா பார்த்துப் பயந்து விட்டார். "யாரடா உன்னை இப்படிப் பண்ணினது" என்றார். "என்னுடன் படிக்கிற இன்னொரு பையன் என்றான் நாளைக்கு உன்னோடு பள்ளிக் கூடத்துக்கு வருகின்றேன். நீ எனக்கு அவனை அடையாளம் காட்ட முடியுமா? என்றார் அப்பா "அது மிகவும் சுலபம்" என்றான் பையன் "எப்படி?" என்றார் அவனது காதிலே ஒன்றைக் கையோடு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன் என்றான் பையன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# புலிகளின் பலம் அதிகரித்திருக்கிறது போருக்கும் ஆயத்தமாகிறார்கள்

## சுவர்ணவாஹினி பேட்டியில் ஜனாதிபதி கவலை



(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் விடயத்தில் தன்னால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் புறந்தள்ளப்பட்டிருக்கின்றன. புலிகளின் படைபலம் அதிகரித்திருக்கிறது. அவர்கள் மீண்டும் போருக்குத் தயாராகின்றனர். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க சுவர்ணவாஹினி தொலைக் காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

உள்ளகச் சுயநிர்ணய உரிமைக் கொள்கை நாடுகளை ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிப்பதற்கே பயன்பட்டு வந்துள்ளது. சுயநிர்ணய உரிமைக்கும், சயநிர்ணய உரிமைக்கான உரிமைக்குமிடையே வேறுபாடு இருக்கிறது.

1997இலும் 2000த்திலும் சமஷ்டிக்கு நிகரான அரசியலமைப்புத் திருத்தம் முன்வைக்கப்பட்டது. ஒரு சமஷ்டி ஆட்சிக்கு இருக்கக் கூடிய மிகக் கூடிய அதிகாரங்கள் பற்றியும், மிகக் குறைந்த அதிகாரங்கள் பற்றியும் பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்படல் வேண்டும். பொருளாதார நெருக்கடிக்காலத்தைத தொடர்ந்து பொருளாதார முன்னேற்றமொன்று ஏற்படலாமாயினும், புலிகளுக்கு வழங்கப்படக்கூடிய நிலத்தை மீண்டும் திருப்பிப்பெறுவது நடக்கக்கூடிய காரியமல்ல எனக் கூறினார்.

முற்போக்குக் கட்சிகளுடன் ஒரு முன்னணியை அமைப்பது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையென்றும், ஜே.வி.பி ஜனநாயக பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்றும், இதனால் அக் கட்சியுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுக்கள் சுதந்திரக் கட்சியின் கொள்கையைப் பாதிக்க மாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# கேரதீவு-சங்குப்பிட்டி பாதையை உடனடியாகத் திறக்கவும்

## அமைச்சர் மகேஸ்வரன் வேண்டுகோள்

(கொழும்பு)

2003மார்ச் 1ஆம் திகதி மகா சிவராத்திரி விழாவுக்கு முன்பதாக கேரதீவு - சங்குப்பிட்டி நெடுஞ்சாலையைட் பொதுமக்கள் பாவனைக்காக மீளத் திறந்துவிடுமாறு இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகெங்கும் வாழும் இந்து மக்கள் முழுமுதற் கடவுளாகிய சிவ பெருமானை வேண்டி எடுக்கும் பெருவிழா மகாசிவராத்திரி ஆகும்.

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள இந்து ஆலயங்களில் இவ் விழா நடைபெறுவதாயினும் நாயன்மார்களால் பாடல் பெற்ற வரலாற்றுப் பெருமைமிக்க புகழ்பூத்த திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நடைபெறும் விழாவே ஈழத்தில் வாழும் சைவ மக்களுக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. அந்த விழாவுக்கு நாடெங்கிலுமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகைதந்து சிவபெருமானை வேண்டி விரதமிருந்து வழிபாடு செய்வது பண்டுதொட்டு நடைபெற்றுவரும் அதி உன்னத விழாவாகும்.

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும இவ்விழாவுக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வருகைதரும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கேரதீவு - சங்குப்பிட்டி நெடுஞசாலையைப் பாவிப்பது இன்றியமையாத தேவையாகும். 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தின் பின்னர் இந் நெடுஞ்சாலை பொதுமக்கள் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்நெடுஞ்சாலையைச் சூழவுள்ள கிராமங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டமையினால், இந் நெடுஞ் சாலையைத் தொடர்ந்தும் பொது மக்கள் பாவனைக்குத் தடைசெய் திருப்பது நியாயமற்றது. யாழ்ப் பாணத்திலிருந்து திருக்கேதீச்சரம் செல்லும் பக்தர்கள் கேரதீவு - சங்குப் பிட்டிப் பாதையைப் பயன்படுத்தாது வவுனியா மூலம் திருக்கேதீச்சரம் செல்வதாயின் அதிகளவு பணத்தையும் அதிகளவு நேரத்தையும் செலவிட வேண்டிய சிரமங்களுக்கு உள்ளாவார்கள். ஆகவே, கேரதீவு - சங்குப் பிட்டிப் பாதையைத் தாமதிக்காமல் திறந்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேனறேன். இவ்வாறு அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டது. (க)

## இராசி பலன்

**20. 01. 2003**

**(தை 6, திங்கள்)**

| | |
|---|---|
| துதியை | பி.இ 3.07வரை |
| ஆயிலியம் | பி.ப 3.13 வரை |
| இராகுகாலம் | 8.05 - 9.35 |
| சுபநேரம் | 12.35 - 2.05 |

**மேடம்**
கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், புதிய சிந்தை, தன விரயம்.

**இடபம்**
வாகன சுகம், பெரியோர் சந்திப்பு, தனவரவு, முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
மாதர் நட்பு, காரியம் கைகூடும், தன வரவு, சத்துரு ஜெயம்.

**கடகம்**
புதிய பொருள் சேர்க்கை, ஆழ்ந்த சிந்தை, போசன சுகம், நல்ல முயற்சி.

**சிங்கம்**
பிதா வழி உறவு, தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், பிரயாணம்.

**கன்னி**
சகோதரர் உதவி, எதிர்பாராத நன்மை, ரோக நிலை, தொழில் முயற்சி.

**துலாம்**
இடமாற்றம், கடின உழைப்பு, காரிய அனுகூலம், கடும் வார்த்தை.

**விருச்சிகம்**
ஆன்றோர் மதிப்பு, தொழில் நிலை மாற்றம், முயற்சி பலிதம் மனச்சஞ்சலம்.

**தனுசு**
செல்வாக்குக் குறைவு, சயனசுகக் குறைவு, வாகன பயம், முயற்சி தாமதம்.

**மகரம்**
போசன சுகம், வியாபார நன்மை, குடும்ப சுகம், பிரயாணம்.

**கும்பம்**
காரிய அனுகூலம், திடீர்ப்பயணம், தனவரவு, நண்பர்கள் சந்திப்பு.

**மீனம்**
வியாபார நன்மை, முயற்சி பலிதம், குடும்பக்கவலை, நல்ல செய்தி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்

# இலங்கையின் எழிலைக் காண சவூதி இளவரசர் பேராவல்

(கொழும்பு)

சவூதி இளவரசர் முஹம்மத் இப்னு பஹ்த் இலங்கையின் இயற்கை அழகை ரசிக்க மிகுந்த ஆவல் கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரிடம் மேற கண்ட தனது ஆசையை வெளிப்படுத்தியுள்ளார்.

சவூதி அரேபிய உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வரப் பெரும் ஆவல் கெண்டுள்ளனர், வருடாந்தம் 150ஆயிரம் உல்லாசப் பயணிகள் மலேசியாவுக்குச் செல்கிறார்கள் இலங்கை அரசாங்கம் பரந்தளவிலான பிரசாரங்களை மேற்கொள்ளுமெனில் இங்கிருந்து பெரும் எண்ணிக்கையான உல்லாசப் பயணிகள் இலங்கை வருவர் என சவூதி இளவரசர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பசுமையையும், எழில்மிகு நீர்வீழ்ச்சிகளையும், பசுமையான தேயிலைத் தோட்டங்களையும் காண இளவரசர் பேராவல் கொண்டுள்ளதாக அமைச்சர் அஸ்வர் தெரிவித்துள்ளார். (உ-3)

# நாவாந்துறையில் அமைதி இயல்பு வாழ்க்கை திரும்புகிறது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் கடந்த சில தினங்களாக இரு கோஷ்டிகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு இப்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நாவாந்துறையில் அமைதி நிலவுவதுடன் இயல்பு வாழ்க்கையும் ஏற்பட்டு வருகின்றது.

இங்குள்ள இரு கோஷ்டியினருக்குமிடையில் சமரசத்தினை ஏற்படுத்துவதில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது தொடர்பாக சமாசப் பணிமனையில் நேற்று முன்தினம் தலைவர் எஸ்.தவரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாவாந்துறை சென்.நிக்லஸ், சென். மேரிஸ் விளையாடடுக் கழகங்களின் உறுப்பினர்கள் பங்குகொண்டிருந்தனர்.

மேலும், இப்பகுதியில் எதிர் காலத்தில் எப்பிரச்சினையும் நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு 16பேர் கொண்ட குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (க-77 தென்மரா.நிருபர்)

## இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பிரான்ஸ் கட்றபடைக் கப்பலின் இந்து சமுத்திரவலய கட்டளை அதிகாரி ரியல் அட்மிரல் வில்மட்ரசல், இலங்கைக் கடற்படைத்தளபதி வைஸ்அட்மிரல் தயா சந்தகிரியை உத்தியோக பூர்வமாகச் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பு இன்று இடம்பெறவுளது. இச்சந்திப்பினையடுத்து பிரான்ஸ கடற் படைத்தளபதி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவையும் சந்தித்துப் பேசவுள்ளார். (க-5)

கருவியும் காலமும்
செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது
அமைச்சு

குறள்.

# வலம்புரி

## எதிர்க்கட்சி தலைவரின் வருகை

அரசுக்கும் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் பிரதமர் உட்படப் பல அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். அவர்களின் யாழ். வருகை தென்னிலங்கையில் தத்தம் அரசியல் பலத்தை அதிகரிப்பதற்கு உறுதுணையாக இருந்திருக்கும்.

ஆனால் இன்று, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தருவது முக்கியமானதொரு நிகழ்வாகும். அரசின் சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருக்கின்ற பொதுஜன ஐக்கிய முன்னணியே பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவுள்ளது. இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வது தமிழ் மக்களின் அவல நிலைமைகளை நேரில் அவதானிக்கவும், தென்மராட்சி மற்றும் தீவகம் போன்ற இடங்களில் ஏற்பட்ட அழிவுகளை நேரில் தரிசிப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும்.

உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவத்தை அகற்றக் கூடாதென்பதிலும், அங்கு மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அனுமதிக்க முடியாதென்பதிலும் மிக இறுக்கமான கொள்கையைக் கடைப்பிடித்து வரும் ஜனாதிபதிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்கும் உண்மை நிலையை தெரியப்படுத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷவின் யாழ். வருகை பயனுடையதாக இருக்கும்.

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் குடியிருந்த மக்கள் தங்கள் இருப்பிடங்களை இழந்து, அகதி முகாம்களில் அவலப்படும் நிலையை எதிர்க்கட்சித் தலைவர் நேரில் சென்று பார்வையிட வேண்டும்.

எதிர்க்கட்சியென்றால் எல்லாவற்றையும் எதிர்க்கும் கட்சியாக இல்லாமல், கடந்த இருபது வருடகால யுத்தத்தால் தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட உயிர், மற்றும் உடைமை அழிவுகளைத் தடுப்பதற்கு, அரசினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் தம்பக்க ஆதரவை வழங்க முன்வர வேண்டும்.

## தன்னுடன் வாதிடவருமாறு
# அமைச்சர் பந்துல குணவர்த்தன
# ஜனாதிபதிக்கு அறை கூவல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா விஜயகுமாரணதுங்காவை தன்னுடன்வாதிட வருமாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன அறைகூவல் விடுத்துள்ளார்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலிற்கு முன்பு மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்திநடவடிக்கைகளுக்கும் தற்போதைய அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னெடுப்பிற்கும் இடையேயான ஒற்றுமைவேற்றுமைகள் தொடர்பாக வாதிடவருமாறு அமைச்சர் அறைகூவல் விடுத்தார்.

இவ்வாறான சவாலை விடுப்பதற்கு தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் என்றவகையில் தமக்கு பொறுப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின்அபிவிருத்திகுறித்த மாறுபட்ட கருத்துக்களை ஜனாதிபதி சந்திரிக்கா தனியார்தொலைக் காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தமையை அடுத்தே தான்மேற்கண்ட முடிவிற்கு வந்ததாக அமைச்சர் பந்துல குணவர்த்தனா தெரிவித்தார். (க-10)

## இலங்கையில்
# சமாதான முயற்சிகள் உதவ அமெரிக்கா தயார்
### இராஜாங்க செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளை மிக உன்னிப்பாகக் கவனித்துவரும் அமெரிக்கா, சமாதானத்தை உருவாக்குவதற்கு தேவையான சகல உதவிகளை வழங்கவும் தயாராக இருக்கிறது.

இவ்வாறு அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கொலின்பவல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த சிபசிங்காவை சந்தித்து கொலின்பவல் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போதே பவல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதில் இலங்கைப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுமை

(2ம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி முறைகுறித்துவிளக்க
# கனேடிய பெடரேஷன் குழு விரைவில் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பாக எதிர்க்கட்சி மற்றும் இதர அரசியல் கட்சிகள் உள்ளிட்டோருக்கு விளக்கமளிக்கும் பொருட்டு கனேடிய அரசு சார்பற்ற போரம் ஒப் பெடரேஷன் குழு இலங்கைவரவுள்ளது

எதிர்வரும் மார்ச் மாதம் இங்கு வரவுள்ள இக்குழுவினர் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் சமஷ்டி முறை குறித்து விளக்கமளிப்பதுடன் கருத்தரங்குகள் பலவற்றிலும் கலந்துகொள்ளவுள்ளது.

இலங்கை அரசாங்கம் மற்றும் பொது அமைப்புகளின் அழைப்பின் பேரில் இவ்வமைப்பு இங்கு வரவுள்ளது

அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடந்து முடிந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போதும் இவ்அமைப்பினர் வருகை தந்திருந்தனர்.

மேலும் இவர்கள் அவ்வப்போது சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு விடயத்தில் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆலோசனைவழங்கி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-03)

# பதவி உயர்வுகள் நிறுத்தம் பொலிஸ்மாஅதிபர்உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளின் விசேட பதவி உயர்வுகள் நிறுத்தப்பட்டுள்ளன இதற்கான உத்தரவை பொலிஸ்மா அதிபர் ரி. ஆனந்தராஜா பிறப்பித்துள்ளார்.

மேலதிகாரிகள் செய்யும் விசேட சிபாரிசுகள் மூலமே இப் பதவி உயர்வுகளுக்கான சன்மானங்களும் வழங்கப்பட்டன சாதாரண பதவி உயர்வுகளுக்கு மேலதிகமாகவே இவை வழங்கப்பட்டு வந்துள்ளன. இவை அதிகாரிகளை உற்சாகப்படுத்தும் நோக்கிலேயே இம்முறை செயல்படுத்தப்பட்டது. இம் முறையினால் ஏற்படும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கையை பொலிஸ்மா அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இதன்படி சன்மானங்கள் மாத்திரம் வழங்கப்படலாம் பதவி உயர்வுகள் வழங்கப்பட மாட்டாது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பிரதேசங்களுக்கு பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-3)

## தினசரி தியானம்

### பக்தியோகம்

பதவி மோகம், உலகப் பொருள்களில் ஆசை, புலன் வேட்கை, தன்னலம் காமம், பண ஆசை இவை எல்லாம் மனிதனை உண்மையான வாழ்க்கையிலிருந்து. இன்றைய உலகின் சீர்கேடான வாழ்க்கைக்குக் கொணர்ந்திருக்கிறது மனிதன் மட்டும் உண்மையான பக்தியோகத்தில் இறங்கினால், அவன் இழந்த தெய்வீகத் தன்மையைத் திரும்பப் பெறமுடியும். மிருகத் தன்மையை தெய்வத்தன்மையாக மாற்றி, அத்தெய்வத்தன்மையின் ஜோதி மயமான உச்சிக்கு இட்டுச் செல்லும் சக்தி வாய்ந்தது பக்தி இப்பிறவியிலேயே தெய்வதரிசனம் கிட்டச் செய்யும் சக்தி வாய்ந்த பக்தியை நீ கடைப்பிடிப்பாய்.

- சுவாமி சிவானந்தர்

## இலக்கிய ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் இலக்கிய ஒன்றுகூடல் நாளை பி. ப. 3 30மணிக்கு ஒன்றியத்தின் மண்டபத்தில் முன்னாள் யாழ் கோட்ட உதவிக்கல்வி பணிப்பாளர் ஆ இராஜகோபால் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், 'லண்டன் ரைம்ஸ்' ஆசிரியர் பி. ராஜசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-3)

## மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(திருநெல்வேலி)

2003 ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத்திட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அடுத்த மாதம் முதலாம்திகதி தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி ஆனந்த சங்கரி தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு இணைத் தலைவர்அமைச்சர் தி மகேஸ்வரன் உட்பட யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-43)

## சிரான் அலுவலக
# புனர்வாழ்வு கூட்டத்திற்கு 20 லட்சம் ரூபா செலவு
### அலுவலக வட்டாரங்கள் அதிர்ச்சித் தகவல்

(கிளிநொச்சி)

வடக்குக் கிழக்குப் பகுதிகளினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி மனிதாபிமான தேவைகளை ஆராய்வதற்காக கிளிநொச்சி சிரான் அலுவலகத்தில் கூட்டப்படும் புனர்வாழ்வுக் கூட்டம் ஒன்றுக்கு சுமார் இருபது லட்ச ரூபா செலவிடப்படுவதாக சிரான் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த உபகுழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலிருந்து வரும் அரச பிரதிநிதிகள் உலங்கு வானூர்தியை பாவிப்பதனாலேயே இத்தகைய செலவு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இச் செலவினத்தை ஜப்பான் பொறுப்பேற்று அதனை வழங்க தயாராக இருப்பதாக ஜப்பானிய விசேட தூதுவர் யசூகி அகாசி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில்
# காணாமல் போனோரின் உறவினர் கலந்துரையாடல்
### முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில்காணாமல்போனோரின் பெற்றோர், குடும்ப அங்கத்தினருக்கான கலந்துரையாடல், காணாமல் போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது.

1995, 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில்படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன 618 பேர் தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் காணாமல் போனோரின் தகவல்களைப் பெறுவது,வழக்குத் தாக்கல் செய்து நட்டஈடு பெறுவது சம்பந்தமான சட்ட ரீதியான அணுகு முறை தொடர்பாக சாலியநாணயக்கார,சாந்தடி பத்திரன, பிரபல மனித உரிமைக்கான சட்டத்தரணி சந்திரபால குமாரகே ஆகியோர் விளக்கமளித்தனர்.

சட்டத்தரணி சந்திரபால குமாரகே இது தொடர்பில் கருத்துக் கூறுகையில்;

மேற்படி நபர்கள் காணாமல் போன காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த ஜானக பெரேராவை யாழ்ப்பாணம்அழைத்து வந்து விசாரணைமேற்கொள்ளவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், காணாமல் போனவர்கள் குறித்த சரியான தகவலையன்றி அரசு வழங்கும் நட்டஈட்டை நாம் எதிர்பார்க்கவில்லை,

எமது உறவுகளுக்கு நடந்தது என்ன என்பதை அறிய அரசுக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கியுள்ளோம்.

தவறும்பட்சத்தில் சர்வதேச நீதிமன்றில் இது தொடர்பில் வழக்குத்தாக்கல்செய்வதுடன் யாழ்.செயலகத்தை ஸ்தம்பிக்கச்செய்யும்வகையில் மறியல் போராட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளோம்.

இதுவிடயத்தில் விடுதலைப் புலிகளின் உதவியைக் கோரி நிற்பதாகவும் குறிப்பிட்டார். நேற்றைய நிகழ்வில்,யாழ். மாவட்ட அன்னையர் முன்னணிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (உ)

# யாழ்.பல்கலைக்கழகம் சிறந்த கலைஞர்களை உருவாக்கி வருகிறது

## பரத நாட்டிய அரங்கேற்ற விழாவில் அடையாறு கே. லக்ஷ்மன் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பல்வேறு துறைகளிலும் பல




கலைஞர்களை உருவாக்கி வருகிறது. யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலை வளாகம் தரமான பயிற்சிகளை வழங்கி அவர்களை முழுமையான கலைஞர்களாக மாற்றி வருவது பாராட்டுக்குரியது. இவ்வாறு பரத சூடாமணி இயக்குநர் பத்மஸ்ரீ அடையாறு கே.லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

செல்வி துஸ்யந்தி இரவீந்திராவின் பரதநாட்டிய அரங்கேற்றத்தின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பத்மஸ்ரீ அடையாறு கே.லக்ஷ்மணன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இவ்வரங்கேற்றத்தின் போது அவர் மேலும் தெரிவிக்கையில:

பரதக் கலை ஆடவல்லான் அருளில் அரும் பெரும் வரப்பிரசாதமாகும். இதனை நன்கு திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். பரதம், சங்கீதம் போன்ற எந்தக் கலையானாலும் அவற்றைக் கலைஞர்கள் மரபுவழி நின்று, மரபுவழி பிறழாமல், மரபுத் தன்மையோடு பயின்று அதனை செயற்படுத்த வேண்டும். பிரமிக்கத்தக்க கலை அம்சம் நிறைந்த உயர்ந்த கலையை எத்தனை எத்தனையோ வடிவத்தில் கலைஞர்கள் ஆடி வருகிறார்கள். இந்த வகையில் செல்வி துஸ்யந்தி இரவீந்திரா தனது பரத நாட்டிய அரங்கேற்றத்தில் தள ஞானம், அபிநயம் சிறக்க அழகாக ஆடியுள்ளார். அபிநயம் அவரது உடலுடன் இணைந்து கட்டுப்பாட்டுடன் இயங்கியது. அது உண்மையிலேயே அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்தியது என்று கூறிய அடையாறு லக்ஷ்மன் எந்தக் கலையைப் பின்பற்றினாலும் அதில் குருபக்தி மேலோங்கிக் காண வேண்டும். தமக்குக் கற்பித்த குருவை மறக்காமலும், அவர் அளித்த பயிற்சிகளை மறக்காமலும் இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

இவ்வரங்கேற்றத்தின் போது யாழ்.பல்கலைக்கழக உபவேநதர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அசண்முகதாஸ் மற்றும் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் ஆகியோர் செல்வி துஸ்யந்தி இரவீந்திராவை பாராட்டிப் பேசினார்கள். (வ)



வவுனியா சாயிசமித்தியின் புதிய கட்டடத்தை வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்

### எதிர்க் கட்சி...

யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள முன்னாள் அமைச்சர் பௌஸி குருகுலத்திற்கு தொலைக்காட்சி பெட்டி ஒன்றையும் அன்பளிப்புச் செய்யவிருப்பதுடன, வறிய மாணவர்கள் இருபது பேருக்கு தனது சொந்த பணத்தில் சேமிப்புக் கணக்கினையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இக்குழுவினர் தமது ஒரு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு உடனடியாகவே கொழும்பு திரும்பவுள்ளனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி எதிர்ப்பைத் தெரிவித்து வரும் இவ்வேளையில் இவர்களது யாழ். விஜயம் முக்கியத்துவம் பெறுவதாக அரசில் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (6)

### சர்வதேச இந்து...

ஜனாதிபதியிடம் விடுத்தனர்.

அமைச்சர் மகேஸ்வரன் விடுத்த வேண்டுகோளுக்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்தா.

அதேவேளை விரைவில் மற்றுமொரு சந்திப்பு நிகழ இருப்பதாகவும் ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(6)

### பாதுகாப்பு...

சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

அதிஉயர் பாதுகாப்பு வலயம தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகாவினால் வழங்கப்பட்ட அறிக்கையும் லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரின்ன ஆலோசனையின் பேரில் தயாரிக்கப்பட்டதாகவும் தற்போது தெரிய வந்துள்ளது.

இளைப்பாறிய இந்திய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை உத்தியோக பூர்வமாக அரசின் கைக்கு கிடைக்கர்த நிலையிலும், இராணுவ பாதுகாப்புக் கருதி அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இருந்து இராணுவம் வெளியேறக் கூடாதென சதீஸ் நம்பியாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக வெளியான செய்தி அரசியல் அவதானிகள் மத்தியில் பலத்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ம)

### பாதுகாப்பு...

. முப்படைகளின் தளபதியான ஜனாதிபதிக்கு,உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தை கையாளும் தளபதி நம்பியாருக்கும்,இந்திய அரசுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று தெரிவிக்கப் படுகின்றது. (இ)

### வடக்கு கிழக்கு...

கால நிதியத்திலிருந்து புனரமைப்புத் தேவைகளுக்காக வழங்கப் போவதாக உலக வங்கியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் விரைவாக அமுல் செய்ய வேண்டிய திட்டங்கள், துரித சேவை மதிப்பீட்டு திட்டங்கள் மூலம் இனங்காணப்பட்டுள்ளதாகவும்.ஐக்கிய நாடுகள் சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆகியவற்றின் பங்களிப்புடன் விரிவான சேவைகள் பற்றிய மதிப்பீடு ஒன்று இன்று நடைபெறவுள்ளதாகவும்,அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள மதிப்பீட்டின் போது புனரமைப்பு, கல்வி, மீள்குடியமர்வு, வேலைவாய்ப்பு ஆகியவற்றிக்கான தேவைகள் இனங்காணப்படவுள்ளது. (இ-5)

## விளையாட்டுச் செய்தி

### வி.பி.கிண்ண கிரிக்கெட் தொடர்

### இலங்கை இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை இழந்தது

(அடலைற்)

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி.கிண்ண மும்முனை சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித தொடரின இறுதி ஆட்டத்தில் விளையாடும் வாய்ப்பை இலங்கை அணி இழந்துள்ளது.

அடலைற் மைதானத்தில் அவுஸ்ரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து அணி ஒரு போனஸ் புள்ளியைப் பெற்றதன் காரணமாகவே இலங்கை அணி இறுதிப் போட்டியில விளையாடும் வாய்ப்பினை இழந்தது.

நாளை நடைபெறவுள்ள இலங்கை,அவுஸ்ரேலியா அணிகளுக்கிடையிலான போட்டியில் இலங்கை அணி,போனஸ் புள்ளியுடன்கூடிய வெற்றியை பெற்றாலும் இங்கிலாந்துடனான நான்கு போட்டிகளில் மூன்று போட்டிகளில் தோல்வியுற்றதால் இறுதிச்சுற்றுக்கு தெரிவாகும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

இதேவேளை நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 48.3 ஓவர்களில்,சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணியில் போல்கொலிங்வூட் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 47.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து,153ஓட்டங்களைப் பெற்று, நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.இதில் டேவிமாட்டின் 59 ஓட்டங்களைப் பெற்றார் (இ)

### யாழ். சேவையில் ஒலிபரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கடந்த 18ம் திகதி நடை பெற்ற சுவாமி விவேகானந்தரின் ஜெந்திதின ஆன்மீக எழுச்சி நிகழ்வின் ஒரு பகுதி இன்று இரவு 9.30 மணிக்கு யாழ் சேவையில் ஒலிபரப்பப்படும்.(ந)

### ஜனாதிபதி...

மங்கள சமரவீர,லஸ்மன் கதிர்காமர் ஆகியோரும், ஜே.வி.பியின் சார்பில் கட்சியின் பிரசார செயலர் விமல்வீரவன்ச தலைமையிலான குழுவினரும், கலந்து கொள்ளவுள்ளனர்.

இதே வேளை கடந்த 2000ம் ஆண்டு ஜே.வி.பியும் பொது ஜன ஐக்கிய முன்னணியும் கூட்டுச்சேர்ந்து ஆட்சி நட்த்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### புலிகள்...

கின்றனர். ஆயுதங்களை செயலிழக்க வைக்கும் யோசனைகளுக்குத் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனா.நோர்வேககாரர்களுக்கு புலிகள் பற்றிய போதிய புரிந்துணர்வு இல்லை. அல்லது தாம் எத்தகைய விடயத்தினுள் கால் வைத்திருக்கிறார்கள் என்பதில் அவர்களுக்கு தெளிவு இல்லை என்பது எனக்கு நன்றாக தெரிகிறது.

வானொலிச்சாதனங்கள் புலிகளுக்கு மிகவும் சத்திவாய்ந்த ஆயுதமாகும். இலங்கைக்குள் மட்டுமன்றி தென்னிந்தியாவுக்கும் ஒலிபரப்புச்சேவையை கேட்கச் செய்யமுடியும்.

தொடரும் சமாதான நடவடிக்கைகளை படையினரதும் பௌத்த குருமாரினதும் ஆதரவுடன ஜனாதிபதி குமாரதுங்க அதனைப்பாதிக்கச் செய்வார் என்பதே எனது நம்பிக்கை என்றும் தெரிவித்த டிக்சிற், இவற்றின் எதிர்காலம் பற்றி நல்ல நம்பிக்கை கொள்வதற்கில்லை என்றும் தெரிவித்துள்ளார். (இ)



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற செல்வி துஸ்யந்தி இரவீந்திராவின் பரத நாட்டிய அரங்கேற்றத்தின் சில காட்சிகள்
படங்கள்: தட்சணேஸ்வரன்


### பாராட்டுதல்

அளவெட்டி கிழக்கு,அலுக்கைச்சந்தி,அளவெட்டியில் வசிக்கும் திருமதி நிகர்ராசா இன்பவதனி 36 வயது ஆகிய நான் நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டு யா.போதனா வைத்தியசாலையில் சில காலம் சிகிச்சை பெற்றும் குணமடையவில்லை.

சித்த ஆயுள் வேத வைத்திய கலாநிதி க.வே.துரைராசா அகத்தியர் வைத்தியசாலை,குளப்பிட்டிச்சந்தி காங்கேசன்துறை வீதி கொக்குவில் எனும் இடத்தில் 12.07.2001ம் திகதி முதல் 08.03.2002ம் திகதி வரை தமிழ் மருத்துவ முறைப்படி சிகிச்சை பெற்று பூரணகுணமடைந்துள்ளேன். எனது பிணியை நீக்கியமைக்காக வைத்திய கலாநிதி க.வே.துரைராசா அவர்களின் சேவையை பாராட்டுவதோடு என் போன்ற நோயாளிகளும் இவரிடம் சிகிச்சை பெற்று குணமடைவீர்களென நம்புகின்றேன்.

(6469) திருமதி நி.இன்பவதனி.

### ஸ்கிறீன் பிரிண்டிங் பயிற்சி

ஓர் அரிய சந்தர்ப்பம்

தென்னிந்தியாவிலிருந்து அச்சுக் கலை நிபுணர் R.பரதன் D.P.Tech. யாழ் வருகைதருகிறார் 31.01.2003ற்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.



CAREER.COM INSTITUTE

இல.79,பிரதான வீதி,யாழ்ப்பாணம்

T.P. 0777-108423 இணைப்பாளர் (6472)

THE ROYAL COLLEGE OF JAFFNA

SPOKEN ENGLISH WITH GRAMMAR BY VIGNESWARAN ARCHERY

426(302)K.K.S Rd.JAFFNA

BLACK ROAD CHANKANAI


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.